வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
பக்கங்கள் : 16
விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

23.01.2021 சனிக்கிழமை






06
மூன்று தடவை பி.சி.ஆர்.!



10
தமிழ் மக்களுக்கு எதிரான அடக்கு முறை தொடர்கிறது



12
பக்தாத்தில் இரட்டை தற்கொலை தாக்குதல்



13
இலங்கை அணி அபாரம்

# இலங்கை குறித்து ஆராய்வதற்கு சர்வதேசப் பொறிமுறை தேவை!

## ஐ.நாவிடம் வலியுறுத்துகின்றது மன்னிப்புச்சபை

கொழும்பு, ஜனவரி 23

“இலங்கையின் மனித உரிமை நிலவரம் குறித்து ஆராய்வதற்காக சர்வதேச பொறிமுறை ஒன்றை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை உருவாக்கவேண்டும்.”

-இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது சர்வதேச மன்னிப்புச்சபை.

02

## கொரோனாத் தடுப்பூசி விசேட ஒத்திகை இன்று



கொழும்பு, ஜன. 23

கொரோனா தடுப்பூசி தருவிப்பதற்குச் செய்த அனுமதியளிக்கப்பட்ட நிலையில் தடுப்பூசி போடுவது எப்படி என்பது குறித்து இன்று விசேட ஒத்திகையை நடத்த சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இந்த ஒத்திகை பிலியந்தலை மற்றும் ராகம வைத்தியசாலை உள்ளிட்ட 3 இடங்களில் நடத்தப்படும் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி

02

## வடக்கில் மேலும் 30 பேருக்கு கொரோனா தொற்று உறுதி!

### மூவர் வவுனியா வைத்தியசாலை ஊழியர்கள்

யாழ்ப்பாணம், ஜன. 23

வடக்கு மாகாணத்தில் மேலும் 30 பேருக்கு தொற்று உள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் மூவர் வவுனியா பொது வைத்தியசாலையில் பணியாற்றும் சுகாதார ஊழியர்கள் என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தின் நகர்ப் பகுதியில் உள்ள பஜார் வீதி, தர்மலிங்கம் வீதி மற்றும் மில் வீதிகளில் காணப்படும் வர்த்தக நிலையங்களில் கடமை புரிபவர்களுள் 54

02

## இன்னும் 2 வாரங்களில் உயிரிழப்பு அதிகரிக்கும்!

### வைத்திய அதிகாரிகள் எச்சரிக்கை

கொழும்பு, ஜன.23

நாட்டில் தற்போது நாளொன்று 900 ஐ அண்மித்தளவில் கொரோனா தொற்றாளர்கள் பதிவாகக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதே நிலைமை

02

## முடிந்தால் அநுரவை சிறையில் அடைக்கவும்

### அரசுக்கு ஜே.வி.பி. சவால்

கொழும்பு, ஜன. 23

அநுரகுமார திஸாநாயக்கவை ஒரு ஊழல்வாதியென நீதிமன்றில் முடிந்தால் நிரூபித்துக்குக் காட்டுமாறு ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க அரசாங்கத்திற்கு சவால் விடுத்துள்ளார்.

தலவாக்கலை நகரில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு

02

## கொரோனாவால் மேலும் இருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜன.23

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் இருவர் உயிரிழந்தனர் என சுகா

02

## மன்னாரில் கொரோனாவால் இரண்டாவது நபர் உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 23

மன்னார் பொது வைத்தியசாலை சிகிச்சை பெற்று வந்த நிலையில் வீடு திரும்பிய ஒருவர் நேற்று முன் தினம் இரவு உயி

02

## இறக்குமதி என்ற பெயரில் மோசடியில் ஈடுபடும் அரசு

### எதிர்க்கட்சி பகிரங்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.23

அடுத்த மூன்று மாதங்களில் இறக்குமதி செய்யப்பட்வுள்ள 2 இலட்சம் மெட்ரிக் தொன் சீனி மூலம் அரசாங்கத்துக்கு நெருக்கமானவர்களுக்கு 990 கோடி ரூபா வருமானம் கிடைக்கவுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

சீனிக்கான இறக்கு

02

## வெடுக்குநாறிமலைப் பூசகரும் நிர்வாகிகளும் விளக்கமறியலில்



வவுனியா, ஜன.23

வவுனியா நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த வவுனியா வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலய நிர்வாகத்தினர் நேற்று நீதிமன்றில் ஆஜராகிய நிலையில் அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் எதிர்வரும் 27ஆம் திகதி வரை ஐந்து நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

நெடுங்கேணி வெடுக்குநாரி மலையில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு தொல்பொருள் திணைக்கள

02

## இலங்கையில் நாய்களுக்கு புதுவித வைரஸ் தொற்று!

கொழும்பு, ஜன.23

இலங்கையில் செல்லப்பிராணியாக வளர்க்கப்படும் நாய்களுக்கு புதுவித வைரஸ் பரவி வருகின்றது.

அடையாளம் காணப்படாத இந்த வைரஸால் இதுவரை நாட்டின் பல இடங்களிலும் வளர்ப்பு நாய்கள் பல மரணமடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள கால்நடை மருத்துவர்

02

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## முடிந்தால்...

உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருந்த ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் ஊடாக அநுரகுமார திஸாநாயக்கவும் தவறு செய்துள்ளார் என ஒரு கதையைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளனர். ஜனாதிபதியால் நியமிக்கப்படும் குழுக்களால் தண்டனை வழங்கமுடியாது. நீதிமன்றத்தால்தான் தண்டனை வழங்க முடியும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

மக்களுக்கு நாம் ஒன்றை தெளிவாகத் தெரிவிக்க விருப்புகிறோம். நாம் எப்போதும் பேய்களுக்கு பயப்படுவதில்லை. ஆகவே, நாம் அரசாங்கத்திற்கு பயமில்லை. அநுரகுமார திருடர்களுக்கு பயமென்றால் அவர்களை திருடர்களென கூறமாட்டார். ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் பலர் ஊழல்-மோசடிகளில் ஈடுபட்டனர் என்பதற்கான அனைத்து ஆதாரங்களையும் அறிந்துதான் தகவல்களை வெளியிட்டுள்ளோம்.

"ஊழல் எதிர்ப்பு குழுக்கள் என ஊழல்வாதிகளே குழுக்களை அமைத்துக் கொண்டு அரசுக்கு எதிரான கருத்துகளை ஒடுக்குகின்றனர். அவ்வாறான ஊழில் குழுக்களின் மூலம்தான் பிள்ளையானை விடுதலைச் செய்துள்ளனர். அந்த குழுக்கள் ஊடாகதான் சிபாரிசுகள் வருகின்றன. பல்வேறு ஊழல் - மோசடிகள் மற்றும் குற்றச்செயல்களின் ஈடுபட்டவர்கள் விடுதலைச் செய்யப்படுகின்றனர்.

ஆகவே, நீதிமன்றம் நீதியானதா இல்லையா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம். நீதிமன்ற நடவடிக்கைகளை எதிர்கொள்ள நாம் தயார். அதேபோன்று பாராளுமன்றத்திலும், அதற்கும் வெளியிலும் என அனைத்து இடங்களிலும் எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ள தயாராகவே இருக்கின்றோம்.

முடிந்தால் நீதிமன்றில் குற்றவாளியாக்கி அநுரகுமாரை சிறையில் அடைத்துக்காட்டுங்கள். மக்களின் பணத்தில் ஒருசதத்தைக்கூட கொள்ளையடிக்காதவர். ஊழல் எதிர்ப்பு குழுவில் அநுரகுமார திஸாநாயக்கவால் செய்யப்பட்ட ஒருவிடயத்தை நிருபித்துக்காட்டுங்கள்- என்றார்.

## இறக்குமதி...

மதி வரி குறைக்கப்பட்டதால் அரசாங்கத்துக்கோ அல்லது நாட்டு மக்களுக்கோ எவ்வித பயனும் கிடைக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

2015ஆம் ஆண்டுக்கு முன்னர் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2015 இற்கு முன்னர் குறிப்பிட்ட வொரு நிறுவனத்திற்கு மாத்திரம் நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையத்திற்கு நிலக்கரி விநியோகத்திற்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது.

இதன்போது இடம்பெற்ற மோசடிகளைப் போன்று தற்போதும் மோசடிகள் ஆரம்பமாகியுள்ளன. இவ்வாறான செயற்பாடுகளின் காரணமாகவே மின்சாரத்துறை பாரிய வீழ்ச்சியடைந்து நஷ்டத்தில் சென்று கொண்டிருக்கிறது.

இதேபோன்று தான் அண்மையில் சீனி இறக்குமதி வரி குறைப்பில் பாரிய மோசடிகள் இடம்பெற்றன. ஆனால் இதன் காரணமாக அரசாங்கத்துக்கு 11 ஆயிரத்து 400 கோடி ரூபா வருமானம் அற்று போயுள்ளதோடு மக்களுக்கும் எவ்வித பயனும் கிடைக்கவில்லை.

திறைசேரியில் நிதி இல்லாத போதிலும் இது போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கும் அரசாங்கம் அண்மையில் அதிகளவான நாணயத்தாள்களை அச்சிட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதற்கான வர்த்தமானி அறிவித்தல் மேலும் 3 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய எதிர்வரும் 3 மாதங்களில் 2 இலட்சம் மெற்றிக் தொன் சீனி இறக்குமதி செய்யப்படவுள்ளதோடு 990 கோடி ரூபா வருமானம் வர்த்தகர்களுக்கு இலாபமாக கிடைக்கும். இது நாட்டுக்கு பாரிய நட்டமாகும். இதே வேளை சிகரட்டுக்களை களஞ்சியப்படுத்துவதற்கு அரச வங்கிகளில் கடன் வழங்கப்படுகிறது.

கொவிட் இன்னும் சமூகப்பரவலாக வில்லை என்று பொய் கூறுகின்றனர். கொரோனா தொற்று அதிகரிக்கும் நாடுகள் பட்டியலில் இலங்கை முன்னோக்கிச் செல்கிறது. ஆனால் சீனா எமக்கு அடுத்த மட்டத்தில் தான் உள்ளது. கொரோனாவின் இரண்டாம் அலையில் அரசாங்கம் பொறுப்பற்று செயற்பட்டுள்ளமை இதன் மூலம் தெளிவாகிறது- என்றார். (அ-எ)

## மன்னாரில்..

ரிழந்தார். அவருக்கு கொவிட் -19 நோயால் தொற்று உள்ளமை நேற்று மாலை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் இரண்டாவது கொவிட் -19 நோயாளி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார். அத்துடன், வடக்கு மாகாணத்தில் கொவிட் -19 நோயால் உயிரிழந்த மூன்றாவது நபர் இவராவார்.

மன்னார் சிலாவத்துறையைச் சேர்ந்த 63 வயதுடைய இஸ்லாமியர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார். அவர் நாட்பட்ட நோயால் பாதிப்பட்ட நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் கடந்த சில நாள்களாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் வீடு திரும்பியிருந்தார்.

அவர் நேற்று முன் தினம் இரவு உயிரிழந்தார். அவரது மாதிரிகள் நேற்றுக் காலை எடுக்கப்பட்டு பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்திய நிலையில் கொவிட் -19 நோய்த் தொற்றுக்கு உள்ளாகியமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் ஜனாஸா மன்னார் பொது வைத்தியசாலை வைக்கப்பட்டுள்ளது.

## வெடுக்குநாறி...

மும், நெடுங்கேணி பொலிஸாரும் பல்வேறு தடைகளை ஏற்படுத்தி வந்ததுடன் தொல்பொருள்கள் சார்ந்த சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வவுனியா நீதிவான் நீதிமன்றில் வழக்கினையும் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு வவுனியா நீதிமன்றில் கடந்த வருடம் ஒக்ரோபரில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது நிர்வாகத்தினர் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் நவம்பர் ஆறாம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதன்பின்னர், கடந்த நவம்பர் ஆறாம் திகதி ஆலய நிர்வாகத்தினர் நீதிமன்றில் மீண்டும் ஆஜராகிய நிலையில் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அநேகமான வழக்குகள் விசாரணைகளுக்கு அழைக்கப்படாமல் தவணை இடப்பட்டிருந்தது.

அந்தவகையில் இவ்வாண்டு ஜனவரி மாதத்துக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், வழக்கினை முன்னமே அழைக்குமாறு தொல்பொருள் திணைக்களம் சார்பாக ஆஜராகிய சட்டத்தரணிகளால் நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் டிசெம்பர் மாதம் 11ஆம் திகதிக்கு வழக்குத் தவணையிடப்பட்டது.

எனினும், வழக்கின் திகதி மாற்றம் செய்யப்பட்டமை தொடர்பாக நெடுங்கேணி பொலிஸார் தமக்கு தெரியப்படுத்தவில்லை என்று தெரிவித்த ஆலய நிர்வாகத்தினர் நீதிமன்றத்துக்குச் சமுகமளித்திருக்கவில்லை. அன்றைய தினம் அவர்களது பிணையும் இரத்தாகியிருந்த நிலையில் ஆலய நிர்வாகத்தினருக்கு எதிராக நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில், நேற்று வழக்குத் தவணைக்காக ஆஜராகிய ஆலய நிர்வாகத்தினர் மற்றும் பூசகர் ஆகியோரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (அ-எ)

## கொரோனாத்...

வித்ததாவது:-

தடுப்பூசி செயல்முறை தொடங்கிய பின்னர் ஏற்படக்கூடிய நடைமுறைச் சிக்கல்களை அடையாளம் காண்பதில் ஒத்திகை கவனம் செலுத்தும். ஒரு குறிப்பிட்ட நேரத்துக்குள் எத்தனை பேருக்குத் தடுப்பூசி போடலாம் என்று ஆராயப்படும்.

தற்போது 26 கொரோனா நோயாளிகள் தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மற்ற நோயாளிகள் 79 மையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த விடுமுறை நாள்களில் பொது மக்கள் பல்வேறு இடங்களுக்குப் பயணித்ததால் கடந்த சில நாள்களில் கொரோனா நோய்த் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது-என்றார்.

## இலங்கையில்...

சுகத் பிரேமச்சந்திர, தொடர் வயிற்றோட்டம், இரத்த வாந்தி போன்ற அறிகுறிகள் நாய்களுக்கு ஏற்பட்டு பின்னர் மரணமடைகின்றன என்று குறிப்பிட்டார்.

அண்மைக்காலங்களில் மாடு உள்ளிட்ட கால்நடைகளுக்கும் புதுவித வைரஸ் பரவி வருகின்றது. (அ-எ)

## இன்னும் 2...

தொடருமானால் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்போடு எதிர்வரும் இரு வாரங்களில் மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கக்கூடும். எனவே நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

உலக சுகாதார ஸ்தாபனத்தால் ஏதேனுமொரு வகையில் ஏற்றுக் கொள்ளப்பட்டதும், நாட்டுக்குப் பொருத்தமானதுமான தடுப்பூசிகளையே பெற்றுக்கொள்ள வேண்டும்.

தடுப்பூசிகளை கொள்வனவு செய்யும் போது அதுதொடர்பான தீர்மானம் விஞ்ஞானபூர்வமானதாக இருக்க வேண்டுமே தவிர அரசியல் ரீதியானதாக இருக்கக் கூடாது -என்றார். (அ-எ)

## வடக்கில் மேலும்...

பேருக்கு கடந்த 8ஆம் திகதி கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வவுனியாவில் பல இடங்கள் முடக்கப்பட்டு தொற்றாளர்களுடன் தொடர்புடையோர் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் மேலும் 3 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் வவுனியா பொது வைத்தியசாலையில் பணியாற்றும் சுகாதார ஊழியர்கள் மூவருக்கும் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் மன்னார் மாவட்டத்தில் தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் அவர்களில் 22 பேருக்கு தொற்று உள்ளமை யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் இரவு மன்னார் சிலாவத்துறையில் உயிரிழந்த 63 வயதுடைய ஒருவருக்கும் கொவிட் -19 நோய்த் தொற்று உள்ளமை யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்திலும் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது" என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

## ஜெமினி காலமானார்



தேனீ இணையத்தள ஆசிரியரும் சமூக செயற்பாட்டாளருமான ஜெமினி என்று அழைக்கப்படும் கங்காதரன் நேற்று ஜேர்மனியில் காலமானார்.

புலம்பெயர் தேசத்திலிருந்து சமூக அக்கறையுடன் செயற்பட்டு கடந்த 40 வருடங்களாக தேனீ இணையத்தளத்தினை நடத்தி வந்தார். அவர் கடந்த மார்ச் மாதம் கொரனோ தொற்றினால் பாதிக்கப்பட்ட நிலையில் தேனீ இணையத்தளமும் மௌனித்துக் கொண்டது.

இணையத்தளச் செயற்பாடுகளில் தளராத துணிவுடன் போராடிய ஒரு சமூகப்போராளி மறைந்துவிட்டார். தொடர்ந்து நோயுடன் போராடிய அவர் நேற்று காலை ஜேர்மன் வைத்தியசாலையில் காலமானார்.

## கொரோனாவால்...

தார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். இதன்படி நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 276 ஆக அதிகரித்துள்ளது. (அ-எ)

## இலங்கை குறித்து...

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 46ஆவது அமர்வுக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே சர்வதேச மன்னிப்புச்சபை இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

இலங்கையின் மனித உரிமை நிலவரம் குறித்து தொடர்ந்தும் கண்காணிப்பதற்கும் அறிக்கையிடுவதற்கும் பாரிய மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஆதாரங்களை சேகரிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் ஆராய்வதற்கும் சர்வதேச பொறிமுறையொன்றை ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை உருவாக்கவேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை தனது வேண்டுகோளில் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் தொடர்ந்தும் மனித உரிமை நிலவரம் மோசமடைந்து வரும் நிலையில் இவ்வாறான பொறிமுறை அவசியம் எனவும் மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

## தமிழக...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு படையினர் மூலமாக தடுத்து நிறுத்த முடியாதிருப்பதே வேடிக்கையான தாக இருக்கின்றது.

தற்போது ஏற்பட்டுள்ள நான்கு இந்திய மீனவர்களது இழப்பு மிகவும் கவலைக்குரி யதே. மலை முகடுகளிலும் உறைந்த பனிச் சிகரங்களிலும் சீனாவிடமிருந்தும் பாகிஸ்தானிடமிருந்தும் தனது எல்லைகளை பாதுகாக்க யுத்த சன்னதம் கொண்டிருக்கும் இந்தியா, தமிழகத்தின் தனது மீனவர்களை கடலோர பாதுகாப்பு படைகள் மூலமாக எல்லை தாண்டாது தடுத்து நிறுத்த முடியாதிருப்பது வேடிக்கையானதாகவே இருக்கின்றது. இதுவிடயத்தில் இந்தியாவே தனது அப்பாவி மீனவர்களின் உயிரிழப்புக்கு மூலகாரணமாக இருந்துள்ளதை அவதானிக்கமுடிகிறது.

எனவே, இலங்கை கடற்பரப்பில் உயிரிழந்த நான்கு இந்திய மீனவர்களது இழப்புகள், தமிழக அரசினதும் இந்திய அரசினதும் கண்களை திறந்து, எதிர்காலத்தில் இந்திய மீனவர்களது பாதுகாப்பை உறுதி செய்யவேண்டிய தன் அவசியத்தையே இந்தியாவுக்கு வலியுறுத்துவதாக இருக்கின்றது. இதுவிடயத்தில் இந்திய வல்லரசைப் போல தொழில்நுட்ப வல்லமையைக் கொண்டிராத இலங்கையிடம் எதனையும் ஆக்கபூர்வமாக எதிர்பார்க்க முடியாதென்றே கருதமுடியும்.

ஈழநாடு
Eelanadu
23.01.2021 சனிக்கிழமை
சார்வரி, தை 10

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# இனப்படுகொலை விவகாரத்தில் குழப்பம்

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்றவை அனைத்தும், இனப்படுக்கொலை என்னும் வரையறையின்கீழ் நோக்கவேண்டுமெனும் நிலைப்பாட்டை ஒரு தரப்பினர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர். ஆனால், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கடந்த காலத்தில் இந்த நிலைப்பாட்டோடு உத்தியோகபூர்வமாக ஒத்துப்போகவில்லை. குறிப்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் கூட்டமைப்பின் சார்பில் சர்வதேச விவகாரங்களை கையாண்டுவருபவருமான, எம். ஏ. சுமந்திரன் இனப்படுகொலை நிலைப்பாட்டுடன் ஒத்துப்போகவில்லை. அதற்கான வலுவான ஆதாரங்கள் இல்லாத நிலையில் அவ்வாறு கூறுவது எங்களுடைய கோரிக்கைகளை பலவீனப்படுத்திவிடலாம். எனவே, அவற்றை நாம் வலியுறுத்துவது பொருத்தமான ஒன்றல்ல என்பதே சுமந்திரனின் வாதமாக இருந்தது. ஆனால், இதனை சுமந்திரன் மிகவும் வெளிப்படையாகவே கூறிவந்தார். சுமந்திரன் இவ்வாறு கூறியபோது அதனை மிகவும் கடுமையாக எதிர்த்து பேசியவர்களில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மிகவும் முக்கியமானவர். அதே போன்று, ஆரம்பத்தில் தமிழர் சார்பில் முன்வைக்கப்பட்ட பல்வேறு விடயங்களை ஏற்றுக்கொள்ள மறுத்திருந்த சி. வி. விக்னேஸ்வரன், பின்னர் இனப்படுகொலை விவகாரத்தை ஏற்றுக்கொண்டிருந்தார். இதன் தொடர்ச்சியாக, வடக்கு மாகாண சபையில் இனப்படுகொலை தீர்மானத்தையும் நிறைவேற்றினார்.

ஆனால், தற்போது இந்த நிலைமையில் தலைகீழான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அண்மையில் தமிழ்த் தேசியத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான கட்சிகளான கூட்டமைப்பு, கஜேந்திரகுமாரின் முன்னணி மற்றும் விக்னேஸ்வரனின் கூட்டணி ஆகியவை ஒன்றுகூடி ஜெனிவா பிரேரணை தொடர்பில் ஆராய்ந்திருந்தன. இதுதொடர்பில் ஏற்கனவே ‘ஈழநாடு’ தலையங்கத்தில் விபரிக்கப்பட்டிருக்கின்றது. இந்த வரைபிற்கான உள்ளடக்கங்கள் தொடர்பில் ஆராயும் குழுவில், சுமந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் விக்னேஸ்வரன் அணியின் சார்பில் கலாநிதி. சர்வேஸ்வரன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர். சர்வேஸ்வரன் கலந்துரையாடல்களின் ஆரம்பத்திலேயே குழுவிலிருந்து வெளியேறியிருக்கின்றார். சுமந்திரன் மற்றும் கஜேந்திரகுமாரால் தயாரிக்கப்பட்ட வரைபில் இனப்படுகொலை விவகாரம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை; கிளிநொச்சியில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது தங்களின் வற்புறுத்தலின் காரணமாகவே பின்னர் இனப்படுகொலை என்னும் சொற்பதம் இணைத்துக் கொள்ளப்பட்டதாக சுரேஸ் பிரேமச்சந்திரன் தற்போது தெரிவித்திருக்கின்றார். இதுதொடர்பில் ஆராய்ந்து பார்த்தபோது தகவலின் உண்மைத்தன்மையை அறிந்து கொள்ள முடிந்தது.

இந்த விடயத்தில் சுமந்திரனும் கஜேந்திரகுமாரும் ஒன்றுபட்டிருப்பது, பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. ஒருவேளை, சுமந்திரன் தனியாக தயாரித்த ஆவணத்தில் இனப்படுகொலை இல்லையென்றால் அது ஆச்சரியமான ஒன்றல்ல. ஆனால், கஜேந்திரகுமாரின் பங்குபற்றலுடன் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆவணத்தில் இது எவ்வாறு கைவிடப்பட்டது? தவிர, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர், தாங்கள் மட்டுமே சரியான பாதையில் பயணிப்பதாக தொடச்சியாக கூறிவந்தவர்கள். கடந்த பொதுத் தேர்தலில்கூட, முன்னணிக்கு வாக்களிப்பதன்மூலம் மட்டும்தான் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை பாதுகாக்க முடியும் வேறு எவருக்கு வாக்களித்தாலும் அது தமிழ்த் தேசியத்திற்கு எதிரானதென்றே, பொன்னம்பலம் பிரச்சாரங்களை மேற்கொண்டிருந்தார். குறிப்பாக, சுமந்திரன் தமிழ்த் தேசியத்தை பலவீனப்படுத்துவதாகவும், அவரது நிகழ்ச்சிநிரலின் கீழ்தான் கூட்டமைப்பு வழிநடத்தப்படுவதாகவும் முன்னணியினர் தொடர்ந்தும் விமர்சித்து வந்தனர். இவ்வாறானதொரு பின்புலத்தில், இனப்படுகொலை விவகாரத்தில் கஜேந்திரகுமாரின் பொறுப்பை மற்றவர்கள் வலியுறுத்தவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றதென்றால், இதன் பின்னால் இருக்கும் அரசியல் என்ன என்னும் கேள்வி எழுவதில் ஆச்சரியமில்லை. தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி கஜேந்திரகுமாரும் சுமந்திரனும் ஓரணியில் பயணிக்க முடியுமென்றால் அது வரவேற்கப்படவேண்டிய விடயம்தான்.

# தமிழக மீனவர்கள் மரணம்: இந்தியாவின் தவறு!

- அலசுவது **இராஜதந்திரி** -



*இந்திய மீனவர்கள் நான்கு பேர் அவர்களது படகுகள் கடலில் சேதமுற்ற நிலையில் நீரில் மூழ்கி இறந்துள்ளனர். தேடப்பட்டுவந்த இறந்த மீனவர்களின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இச்சம்பவம் குறித்து புதுடில்லியில் இருக்கின்ற இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகரிடம் இந்திய வெளிவிவகார அமைச்சு தனது வன்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது. இச்சம்பவம் குறித்து தமிழகத்தில் மீனவ சமூகத்தினர் ஆத்திர மடைந்துள்ளதோடு, இலங்கை கடற்படை யினரே இந்த மரணங்களை ஏற்படுத்தியுள் ளனர் என்று போர்க்கொடியும் உயர்த்தியுள் ளனர். இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் இவ்வருட ஆரம்பத்தில் இலங்கைக்கு தமது முதலாவது உத்தியோக பூர்வ பயணத்தை மேற்கொண்டதன் பின்னணியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள் ளது.*

**துயரகரமான வாழ்க்கை**

*உலகில் மீனவ சமூகத்தினர் அனைவரது வாழ்க்கையும் கடலோடு பின்னிப் பிணைந்ததாகவே இருக்கின்றது. இதற்கு இந்திய இலங்கை மீனவர்கள் மட்டும் விதிவிலக்கல்ல. கடந்த 10 வருட காலமாக யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கை - இந்திய மீனவர்களுக்கிடையிலான பூசல்கள் நீண்டதொரு தொடர் கதையாகவே இருந்து வருகின்றது. இலங்கையின் மூன்று தசாப்தகால யுத்தத்தில் மிகவும் பாதிக்கப்பட்டு, சொல்லொணாத் துயரை சந்தித்தவர்களாக இலங்கையின் வடபகுதி மீனவர்கள் காணப்படுகின்றனர்.*

*இத்துயரங்களை கண்டுகொள்ளாது, வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சுவதுபோலவே இந்திய மீனவர்கள் இலங்கையின் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டிய மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் காரணமாக, தம்மை ஒரு நீண்டகால கெடுபிடி யுத்தத்திலிருந்து சுதாகரித்துக் கொண்டு மீளவும் தமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப முயலும் இலங்கை மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர்.*

**காணொலி சந்திப்பு**

*சில மாதங்களுக்கு முன்னர் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கையின் பிரதமரோடு நடத்திய காணொலி உரையாடலின்போது உடனிருந்த மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்திய பிரதமரிடம் இலங்கைக்குள் ஊடுருவும் இந்திய மீனவர்கள் பற்றியும் முறையிட்டிருந்தார்.*

*இலங்கை கடற் பரப்பிற்குள் இந்திய மீனவர்கள் நுழைகின்ற விடயம் இந்தியாவிடம் சுட்டிக் காட்டப்படும்போதெல்லாம், புதுடில்லியில் இருநாட்டு பிரதிநிதிகளும் சந்தித்து ஒரு தீர்வைக் காணலாம் என்றே அடிக்கடி கூறப்படுவதுண்டு.*

*ஆனால், இவ்விவகாரம் குறித்து இதுநாள் வரை இரு நாடுகளுமே ஆக்கபூர்வமான சந்திப்புகள் எதனையும் நடத்தவில்லை. மாறாக, இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் ஊடுருவுவதும், அவர்களை இலங்கை கடற்படையினர் விரட்டி அடிப்பதுவுமே ஒரு தொடர்கதையாக இருக்கின்றது.*

*ஒருசில தினங்களுக்கு முன்னரே இலங்கையின் காவலில் வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் 40 பேர் மீளவும் இந்தியாவுக்கு திருப்பியனுப்பி வைக்கப்பட்டனர். ஆண்டு தோறும் இந்திய கடலோர காவல்படையும் இலங்கை கடற்படையும் தமது கடல் பரப்புகளில் எல்லை தாண்டுதல், போதைவஸ்து கடத்தல் என்பவற்றை தடுப்பது சம்பந்தமாக விசேட பயிற்சிகளை மேற்கொள்வதுண்டு.*

**நவீன சாதனங்கள்**

*இப் பயிற்சிகளின்போது இலங்கை கடற்படையைவிட நவீன கப்பல்களையும், சாதனங்களையும் கொண்டதாக, ஏறத்தாள ஒரு கடற்படைக்கே நிகரான பலத்தோடு இந்திய கடலோர காவல் படையினர் இருக்கின்றனர். இந்திய கடலோர காவல்படையினரிடம் செய்மதிகள் மூலமான தொடர்பாடல் மற்றும் ஹெலிகொப்டர் வசதிகள்கூட இருப்பதை காணமுடியும். இத்தகைய வசதி,வாய்ப்புக்களை இந்தியா கொண்டுள்ளபோதிலும், தனது அப்பாவி மீனவர்களை கடலில் காப்பாற்ற முடியாத நிலையில் அந்நாடு இருந்து வருகின்றது. செய்மதிகள் மூலமாக அவர்களுக்கு எச்சரிக்கையை வழங்கக்கூடிய சாதனங்களை இந்தியாவினால் ஏனைய நாடுகளில் இருக்கின்ற மீனவர்களுக்குப்போல வழங்கமுடியும்.*

**வேடிக்கையான விடயம்**

*ஆனால், அடிக்கொரு தடவை விண்வெளிக்கு செய்மதிகளை ஏவிக்கொண்டும், விதவிதமான நவீன ஏவுகணைகளை விண்ணில் செலுத்திக்கொண்டுமிருக்கும் இந்தியாவினால், எல்லை தாண்டும் தனது அப்பாவி மீனவர்களைக் கடலோர*

*(02ஆம் பக்கம் பார்க்க)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# விபத்தை ஏற்படுத்திய ஹன்ரர் தப்பியோட்டம்!

## புளியங்குளம் பகுதியில் சம்பவம்

வவுனியா, ஜன. 23

ஏ-9 நெடுஞ்சாலை வவுனியா-புளியங்குளம் பகுதியில் விபத்தை ஏற்படுத்திய ஹன்ரர் வாகனம் நிற்காது தப்பிச் சென்றுள்ள சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

ஏ-9 கண்டி வீதி வவுனியா-புளியங்குளம் பகுதியில் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி விளம்பரத் தட்டிகளை ஏற்றி வந்து கொண்டிருந்த வாகனத்தை ஹன்ரர் ரக வாகனம் ஒன்று முந்திச் செல்ல முற்பட்டபோது விபத்து ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு முந்திச் சென்ற ஹன்ரர் வாகனம் விளம்பரத் தட்டிகளை ஏற்றிவந்த வாகனத்துடன் கொழுவுப்பட்டு கட்டுப்பாட்டை இழந்து வீதியோரமாக இருந்த மின்கம்பங்களை இடித்ததுடன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோவையும் இடித்து சேதமாக்கியது.

இதனை அடுத்து விபத்தை ஏற்படுத்திய ஹன்ரர் ரக வாகனம் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

விபத்து சம்பவத்தில் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை எனவும் கூறப்பட்டது.




**மேடம்**
வருமானம் திருப்தி. வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வியாபார விருத்தி.நண்பர்கள் உங்கள் செயல்பாடுகளைக் கண்டு பாராட்டுவர்.

**இடபம்**
வெற்றிகளால் துணிவு ஏற்படும். தொகை எதிர்பார்த்த படியே வந்து சேரும். அடிப்படை வசதிகளை பெருக்கிக் கொள்வீர்கள். செய்தொழிலில் லாபம் உண்டு.

**மிதுனம்**
சுறுசுறுப்பாகச் செயல்படும் நாள். விவாகப் பேச்சுகள் நல்ல முடிவிற்கு வரும். அலுவலகப் பணிகள் துரிதமாக நடைபெறும். வீடு வாங்கும் முயற்சியில் ஆர்வம்.

**கடகம்**
தொழில் வளர்ச்சி கூடும் உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள். செல்வாக்கு மேலோங்கும். உங்கள் கருத்துகளை பலரும் கேட்க முன்வருவர். கனவுகள் நனவாகும்.

**சிம்மம்**
போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காணும் நாள். அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களால் ஏற்பட்ட பகை மாறும்.

**கன்னி**
காரியங்களில் தாமதம் ஏற்படும்.பேச்சில் நிதானம் தேவை. தொழில் கூட்டாளிகளை அனுசரித்துச் செல்வது நல்லது. முடிவுகளில் தடுமாற்றங்கள் ஏற்படலாம்.

**துலாம்**
பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள். பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர். துணிவும், தன்நம்பிக்கையும் கூடும். வாங்கல் - கொடுக்கல்கள் ஒழுங்காகும்.

**விருட்சிகம்**
வெற்றிப்படிக்கட்டின் விளிம்பில் ஏறும் நாள். உடன்பிறப்புகள் உங்களுக்கு உதவிக்கரம் நீட்ட முன்வருவர். காரியவெற்றிக்கு கைகொடுக்கும்.

**தனுசு**
பணத்தேவைகள் பூர்த்தியாகும். நினைத்த காரியங்கள் நினைத்தபடியே நிறைவேறும். புதிய வாகனங்களை வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்**
உற்சாகத்தோடு பணிபுரியும் நாள். பெரியோர்களின் ஆலோசனை நன்மை தரும். கிளைத் தொழில்கள் தொடங்கும்முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்**
வரவும்-செலவும் சமமாகும் நாள். பழைய பிரச்சினைகளைத் தீர்க்க முழு மூச்சுடன் செயல்படுவீர்கள். சேமிப்பு செலவாகாதிருக்க விழிப்புணர்ச்சி தேவை.

**மீனம்**
புத்திசாலித்தனமாக செயல்பட்டு புகழைக் கூட்டிக் கொள்வீர்கள். தடைப்பட்ட ஒப்பந்தங்கள் தானாக வந்துசேரும். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

# சுகாதார பழக்கவழக்கங்களே உலகில் கொரோனா தொற்றை இல்லாது செய்யும்

## மருத்துவர் சி. யமுனாநந்தா சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம்,ஜன.23

**சுகாதாரப் பழக்கங்களே கொவிட்டை உலகில் இருந்து முற்றாக அகற்ற உதவும். அதற்காக இன்னும் இரண்டு வருடங்கள் சுகநல வழிகளில் கவனமாக இருத்தல் வேண்டும் என யாழ்.போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.**

அவர்மேலும்தெரிவிக்கையில்-

தற்போது உலகில் கோவிட் வைரஸ் பரம்பலில் மூன்று வகையான விகாரமடைந்த கொவிட் வைரஸ்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. வேகம் குறைவாகக் காணப்பட்டாலும் புதிதாக மாற்றமடையும் கொவிட் கிருமியினால் ஏற்படும் பாதிப்புக்கள் தற்போது மீளவும்உலகை அச்சுறுத்தி உள்ளன. பிரித்தானியாவின் உருமாறிய புதிய கொவிட் பரம்பலானது இன்று உலகில் 55 நாடுகளில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவ்வாறு புதிய விகாரத்தினால் உருமாறும் கொவிட் கிருமிகளினால் ஏற்படும் பாதிப்புக்களைக் கட்டுப்படுத்த மீளவும் ஆரம்பத்தில் இருந்து முயற்சி எடுக்கவேண்டிய அவலநிலை ஏற்படும்.

கொவிட் கிருமிகள் விகாரமடைய பல காரணிகள் துணைபோகலாம். குறிப்பாக வைத்தியசாலைகளில் கொவிட் நோயாளிகளுக்கு ஒ கதிர் மூலம் பரிசோதனைகள் செய்யும்போது கொவிட் கிருமிகள் விகாரமடையலாம். சமூகத்தில் குறித்த சிலருக்கு கொவிட் தடுப்பு மருந்து கொடுக்கும்போது ஏனையவர்களில் விகாரமுற்ற கொவிட் கிருமிகள் உருவாகலாம். இவை யாவும் எதிர்வரும் இரண்டு வருடங்களுக்கு உலகளாவிய ரீதியில் சவால்களாக அமையும். இந்நிலையில் பயணக்கட்டுப்பாடுகள், சமூக இடைவெளி பேணல், தனிமைப்படுத்தப்படல், முகக்கவசம் அணிதல், கைகளை அடிக்கடி கழுவுதல் போன்ற சுகநல எச்சரிக்கைக் காப்புக்களை கட்டாயம் கடைப்பிடித்தல் அவசியம்.

ஏனெனில் சீனாவில் இருந்து பரவிய வைரஸ் போல் இன்று உலகின் எந்த மூலையில்இருந்தும்புதிது புதிதாக கொவிட் வைரஸ் விகாரமடைந்து பரவலாம். அதற்கு உரிய தடுப்பு மருந்து தயாரிப்பதற்கு முன்பே மீண்டும் பாரிய அழிவினை ஏற்படுத்தலாம்.

எனவே சுகாதாரப் பழக்கங்களே கொவிட்டை உலகில் இருந்து முற்றாக அகற்ற உதவும். அதற்காக இன்னும் இரண்டு வருடங்கள் சுகநல வழிகளில் கவனமாக இருத்தல் வேண்டும்-என்றார்.

# அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியை இலங்கையில் பயன்படுத்தலாம்

கொழும்பு, ஜன. 23

ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியை இலங்கையில் அவசரகாலப் பயன்பாட்டுக்கு பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்தினால் இந்த அனுமதி வழங்கப்பட் டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

இலங்கையில் கொரோனா தொற்று உறுதியான நோயாளிகளுக்கு ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியை செலுத்து வது மிகச் சிறந்தது என அதிகாரிகள் முன்னர் தெரிவித்திருந்தனர்.

உலக சுகாதார அமைப்பின் அனுமதி மற் றும் கொள்முதல் ஒப்பந்தங்களின் அடிப்படையிலேயே தடுப்பூசியை பயன்படுத் துவது குறித்து இறுதி முடிவு எட்டப்படும் எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்திருந்தார். இந்தநிலையிலேயே தற்போது ஒக்ஸ் போர்ட் அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசியை இலங்கையில் அவசரகால பயன்பாட்டுக்கு பயன்படுத்த தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது.



# கிளிநொச்சி செயலகத்தில் நேற்று இரத்ததான முகாம்

கிளிநொச்சி, ஜன. 23

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இரத்ததான முகாம் நேற்று இடம்பெற்றது. நேற்று காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இது ஆரம்பமானது.

இதன்போது மாவட்ட செயலக ஊழியர்களால் கிளிநொச்சி வைத்தியசாலை இரத்த வங்கிக்கு இரத்த தானம் வழங்கப்பட்டது.

# விமான நிலையங்கள் திறக்கப்படுவதால் கொரோனா பரவும் அச்சுறுத்தல் இல்லை!

## இப்படிக் கூறுகின்றார் அமைச்சர் பிரசன்ன

கொழும்பு, ஜன. 23

சுற்றுலாத்துறைக்காகத் தற்போது விமான நிலையங்கள் திறக்கப்பட்டாலும், கொரோனா பரவல் அச்சுறுத்தல் எதுவுமில்லை. என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

எனினும், சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்குள் வருவதில் ஏற்படும் சிக்கல்கள் மற்றும் சுகாதார நிலைமைகள் எவ்வாறு உள்ளன என்பதை அடுத்த இரண்டு வாரங்களுக்கு ஆராய உள்ளதுடன், அவசியமாயின் மாற்று நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-



தற்போது வரை 35 விமான சேவைகள் இலங்கைக்கான பயணங்களை மேற்கொள்ள இணங்கியுள்ளன. எனவே, மீண்டும் இலங்கையின் சுற்றுலாத்துறையை மேம்படுத்த இது நல்லதொரு வாய்ப்பாக அமைந்துள்ளதாகவே நாம் கருதுகிறோம்.

இந்த ஆண்டில் மூன்று மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஒரு நாளைக்கு சுமார் 2 ஆயிரத்து 500 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வரக்கூடிய விதத்திலேயே ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சுற்றுலாப் பயணிகள் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தள விமான நிலையத்தின் ஊடாக நாட்டுக்குள் பிரவேசிக்க முடியும்.

பயணிகள் தம்மைப் பதிவு செய்து கொள்வது தொடக்கம் மீண்டும் இந்த நாட்டில் இருந்து வெளியேறும் வரையில் 'டிரவல் - பபிள்' திட்டத்துக்கு அமையவே செயற்பட முடியும்"-என்றார்.

## இடம்பெயர்ந்த மக்களின் வாக்குரிமை மீறல்:

# மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பிரதேசசபை தலைவர் முறைப்பாடு

மன்னார், ஜன. 23

**இடம்பெயர்ந்த மக்களின் வாக்குரிமை மீறல் தொடர்பாக மன்னார் பிரதேச சபையின் தலைவரால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.**



இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மன்னார் மாவட்ட பிராந்திய அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக மன்னார் பிரதேச சபையின் தலைவர் எஸ்.எச்.எம்.முஜாஹிர் தெரிவித்துள்ளார்.

அவர் கூறுகையில்,

நாட்டில் கடந்த காலங்களில் நடைபெற்ற அசாதாரண சூழ்நிலை காரணமாக 1990ஆம் ஆண்டு காலப் பகுதியில் மன்னாரில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் கல்வி, தொழில், வதிவிடம் போன்ற தேவைகளின் நிமித்தம் தற்போதும் பல்வேறு மாவட்டங்களில் வசித்து வருகின்றார்கள்.

இருப்பினும் இவர்களது அத்தியாவசியத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் பட்சத்தில் சொந்த இடமான மன்னார் மாவட்டத்தில் மீளக்குடியேறத் தயாராக உள்ளனர்.

1981ஆம் ஆண்டு 44ஆம் இலக்க தேருநர்கள் பதிவுச் சட்டத்தில் 12(7)ஆம் உப பிரிவுக்கு இணங்க குறித்த ஒரு வாக்காளர் ஒன்றுக்கு மேற்பட்ட சாதாரண வதிவிடங்களைக் கொண்டிருந்தால் அவரது வாக்கைப் பதிவு செய்வதற்கான தகைமை வாய்ந்த முகவரி எதுவெனத் தீர்மானிக்கும் உரிமை குறித்த வாக்காளருக்கே உரியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறு, இரு இடங்களிலும் ஒருவர் விண்ணப்பித்திருந்தால் எந்த இடத்தைத் தெரிவு செய்யப் போகிறீர்கள் என்று வாக்காளரிடம் கேட்டு ஒரு முகவரியை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் குறித்த தேருநர் பதிவுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், கிராம அலுவலர், மன்னார் பிரதேச செயலாளர் மற்றும் உதவி தேர்தல்கள் ஆணையாளர் ஆகியோரினால் இவ்வாறு இடம்பெயர்ந்த மக்களின் வாக்களிக்கும் உரிமையானது நிரந்தர வதிவிட மாவட்டமான மன்னார் மாவட்டத்திலும் இடம்பெயர்ந்து வாழும் மாவட்டங்களிலும் இல்லாமல் மறுக்கப்பட்டுள்ளது.

இதனால், அவர்களின் பெயர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் என்ற ரீதியில் பாதிக்கப்பட்டவர்கள் என்னிடம் முறையிட்டுள்ளார்கள்.

இவ்விடயம் அவர்களின் வாக்களிக்கும் உரிமையைப் பாதிக்கும் ஒரு ஜனநாயக விரோத செயற்பாடாக அமைவதுடன் மனித உரிமை மீறலாகவும் அமைந்துள்ளது.

எனவே, இவ்வாறு வலுக்கட்டாயமாக அவர்களின் விருப்பத்திற்கு முரணாக தமது வசிப்பிடத்திலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் தாம் பூர்வீகமாக வாழ்ந்த மாவட்டத்தில் தமது வாக்களிக்கும் உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்களின் நிரந்தர வதிவிட மாவட்டமான மன்னார் மாவட்டத்தின் வாக்காளர் பட்டியலுடன் சேர்த்துக் கொள்வதற்கு ஏதுவாக அரசாங்கத்துடனும், தேர்தல்கள் ஆணையாளருடனும் கதைத்து பாதிக்கப்பட்ட மக்களின் வாக்களிக்கும் உரிமையை மீட்டுத்தருவதற்கு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்து மன்னார் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்துள்ளேன்-என்றார்.

(அ)



# சிவில் உடையில் வந்த படையினரே நிலாவரையில் கிடங்கு வெட்டினர்

## சிவாஜிலிங்கம் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 23

சிவில் உடையில் வந்த இராணுவத்திரே நிலாவரையில் கிடங்கு வெட்டினார்கள் என தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழர்களின் பாரம்பரிய நிலங்கள் பறிக்கப்படுவது மாத்திரம் அல்ல மத அடையாளச் சின்னங்கள் சிதைக்கப்பட்டு பௌத்த மதச் சின்னங்கள் புகுத்தப்படுகின்ற ஒரு நிலைமையை நாங்கள் பார்க்கின்றோம்.

இதற்கு நிச்சயமாக தமிழர் தரப்பில் இருந்து மிகப்பெரிய அளவிலான ஒரு எதிர்ப்பு இயக்கம் இல்லாமல் இருப்பது பெரிய குறைபாடு.

நாங்கள் மீண்டும் மீண்டும் தென்னிலங்கை மக்களுக்குச் சொல்ல விரும்புகின்றோம், நாங்கள் புத்த பெருமானுக்கு எதிரானவர்கள் அல்லர். மிகப்பெரிய அரசனாக இருந்து அனைத்தையும் துறந்து வந்த புத்த பெருமானின் போதனைகளை நீங்கள் பின்பற்றாமல் அதே புத்தபெருமானை எங்களை ஆக்கிரமிக்கும் நடவடிக்கைக்கு பயன்படுத்துவதால்தான் நாங்கள் புத்தபெருமானை எதிர்க்கின்றோம்.

எங்களுக்கு இன மத வெறி இல்லை. நீங்கள் சிங்கள பௌத்த நிகழ்ச்சி நிரலுக்கு கீழ் எங்களை ஆக்கிரமிக்க முயற்சிப்பதால்தான் நாங்களும் எதிர்க்கின்றோம். தென்னிலங்கையிலே அவர்களுக்கு ஆட்சிச் சரிவு ஒரு வருடத்தில் வந்துவிட்டது.

நிலாவரையில் கட்டடங்களை கட்டுவதற்கு மதிப்பீடுகள் செய்கின்றோம் என்றார்கள். கிடங்கு ஆழமாக வெட்டப்பட்டிருந்தது. உள்ளிருந்து எடுக்கப்பட்ட மண் சுவர் அருகில் போடப்பட்டிருந்தது. அதற்குள் எதையாவது கொண்டு வந்து புதைத்தார்களோ தெரியவில்லை. இன்னும் சில காலத்தில் புத்தரோ அல்லது வேற ஏதோ வெளிவரலாம் - என்றார்.

(அ)

# இணைய நிதி மோசடிகள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கி எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 23

சமூக ஊடகங்கள், இணைய அடிப்படையிலான பயன்பாடுகள் மற்றும் தொலைபேசிக் கட்டணம் செலுத்தும் விண்ணப்பங்கள் மூலம் பல வகையான நிதி மோசடிகள் மற்றும் மோசடிகள் குறித்து தகவல் கிடைத்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்த மோசடிகளில் பெரும்பாலானவை வலை அல்லது தொலைபேசி பயன்பாட்டு அடிப்படையிலான எளிதான கடன் திட்டங்கள் மூலம் பொதுமக்களை ஈர்ப்பதாகக் கூறப்படுகின்றது.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "இத்தகைய கடன் விண்ணப்ப மதிப்பீட்டு செயற்பாட்டின் போது, மோசடி செய்பவர்கள் இரகசியமான தனிப்பட்ட வாடிக்கையாளர் தகவல் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

டெபிட் / கிரெடிட் அட்டைகள் - அட்டை எண், தனிப்பட்ட அடையாள எண்கள் (பின்ஸ்), அட்டை சரிபார்ப்பு இலக்கங்கள் பொதுவாக அட்டையின் பின்புறத்தில் காணப்படுகின்றன மற்றும் CVV, CVC அல்லது CVS எண்கள், அட்டை காலாவதி திகதி , பரிவர்த்தனை சரிபார்ப்பு தகவல்கள் ஒன் - டைம் - கடவுச்சொற்கள் (OTP கள்) இணைய வங்கி - பயனர் ஐடி / பயனர் பெயர், கடவுச்சொல், OTP மொபைல் வங்கி (கட்டண பயன்பாடுகள்) - பயனர் ஐடி / பயனர்பெயர், கடவுச்சொல், OTP தொடர்பாக பொதுமக்கள் கடுமையாக அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பணம் கொடுக்கும் வணிகங்கள் என்ற போர்வையில் இயங்கும் மோசடிகளுக்கு பலியாகாமல் இருக்க உரிய விடாமுயற்சி மற்றும் கவனிப்புடன் செயற்படுங்கள், ஓர் ஒப்பந்தத்தில் நுழைவதற்கு முன்பு நிதி பரிவர்த்தனை மற்றும் கடன் தரும் பிரிவின் முழு தகவலைப் பெறுங்கள், ஒழுங்குபடுத்தப்பட்ட / அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுடன் நிதிப் பரிவர்த்தனைகளை நடத்துதல், எளிதான / உடனடி கடன் திட்டங்களைக் கையாளும் போது மிகவும் விழிப்புடன் இருங்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் உள்ளடக்கங்களின் தாக்கங்களை முழுமையாகப் புரிந்துகொள்வது கடினம் என்று ஒப்பந்தங்களில் நுழைவதைத் தவிர்க்கவும்.

மேலும், எஸ்.எம்.எஸ் எச்சரிக்கைகள் போன்ற நிகழ்நேர அறிவிப்பு சேவைகளை தங்கள் வங்கிகளிலிருந்தோ அல்லது வங்கி சாரா நிதி நிறுவனங்களிடமிருந்தோ பெறுமாறு மத்திய வங்கி விரும்புகிறது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இளவாலை புனித யாகப்பர் ஆலயம் தனி ஒரு பங்குத் தளமாக பிரகடனம்

## 35 ஆண்டுகளுக்கு பின்னர் நடந்த வரலாற்று நிகழ்வு





யாழ்ப்பாணம், ஜன. 23

இளவாலை புனித யாகப்பர் ஆலயம் 35 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் தனியொரு பங்குத்தளமாக யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு அருட்கலாநிதி ஜஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் பிரகனடப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் இளவாலை மறைக்கோட்டத்தின் 13ஆவது பங்குத்தளம் உதயமாகியுள்ளது.

இந்தப் பங்குத்தளத்தின் பங்குத்தந்தையாகவும் இளவாலை மறைக்கோட்டத்தின் முதல்வராகவும் அருட்பணி சி.ஜி. ஜெயக்குமார் அடிகள் தனது பணிப்பொறுப்பை நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஏற்றுள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை நடைபெற்ற திருப்பலியில் யாழ்.மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்கலாநிதி ப.ஜெபரட்ணம் அடிகளார் முன்னிலையில் இவர் தனது பணிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

இளவாலை மறைக்கோட்டத்தின் முன்னாள் முதல்வரும் முன்னாள் பங்குத்தந்தையுமான அருட்பணி ம.ஜேசுரட்ணம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இளவாலை புனித யாகப்பர் ஆலயப் பங்கில், இளவாலை புனித நீற்றாள் ஆலயம், பத்தாவத்தை புனித பிலிப்புநேரியார் ஆலயம், வலித்துண்டல் புனித அன்னாள் ஆலயம், மயிலங்கூடல் புனித வேளாங்கன்னி ஆலயம், சேந்தாங்குளம் புனித அந்தோனியார் ஆலயம் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

பணிப்பொறுப்பு ஏற்கும் நிகழ்வை அடுத்து புனரமைப்புச் செய்யப்பட்ட ஆலயப் பங்குமனை யாழ்.மறைமாவட்டக் குருமுதல்வரினால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் இளவாலை மறைக்கோட்டப் பங்குகளின் பங்குத்தந்தையர்கள், இளவாலை கன்னியர்மட அருட்சகோதரிகள், அயல் பங்குகளைச் சேர்ந்த மக்கள் கலந்துகொண்டனர்.

# சுற்றுலாப் பயணிகளுக்கு மூன்று தடவை பி.சி.ஆர்.!

## அதன் பின்பே நாட்டைச் சுற்றிப் பார்க்க முடியும்

கொழும்பு,ஜன.23

**விமான நிலையங்கள் உத்தியோகபூர்வமாக திறக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு மூன்று தடவைகள் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு 14 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டதன் பின்னரே நாடு முழுவதும் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள் என்று சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டுக்குள் வரும் சுற்றுலாப் பயணிகள் 14 நாட்கள் தனிமைப்படுத்தப்படுவர். ஆரம்பத்தில் தனிமைப்படுத்தப்பட்ட ஹோட்டலில் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். அதனைத் தொடர்ந்து மேலும் ஐந்து முதல் ஏழு நாட்களுக்குள் அவர்கள் மற்றொரு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

14 நாட்கள் முடிந்த பிறகு, மூன்றாவது பி.சி.ஆர் சோதனை மேற்கொள்ளப்படும். இந்தப் பரிசோதனை முடிவில் எதிர்மறை முடிவு வரும் பட்சத்தில் மாத்திரமே சுற்றுலாப் பயணிகள் நாடு முழுவதும் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

சுற்றுலாப்பயணிகளால் உள்ளூர் மக்களுக்குக் கொரோனா வைரஸ் பரப்புவதற்கான ஆபத்து இல்லை என்பதை உறுதிப்படுத்த வழிகாட்டுதல்கள் வகுக்கப்பட்டுள்ளன.

நாளொன்றுக்கு பத்து விமானங்கள் நாட்டுக்குள் அனுமதிக்கப்படவுள்ளன. நாட்டுக்கு வர விரும்பும் இலங்கையர்களுக்கு ஒரு விமானத்தில் 75 ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அந்த அடிப்படையில் நாளொன்றுக்கு 750 இலங்கையர்கள் நாடு திரும்ப முடியும்-என்றார்.

# பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படாதமை ஏன்?

## மஹிந்தவுக்கு சேவையாளர்கள் சங்கம் கடிதம்

கொழும்பு, ஜன. 23

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு இதுவரை ஆணைக்குழு உறுப்பினர்கள் நியமிக்காமை தொடர்பாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சேவையாளர்கள் சங்கம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்குக் கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

ஆணைக்குழு உறுப்பினர்கள் ஐவரும் தங்களது இராஜிநாமக் கடிதங்களை வழங்கி ஒரு மாதத்துக்கும் மேலாகின்ற நிலையில், இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கான புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படவில்லை என்பது தொடர்பில் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவுக்கான புதிய உறுப்பினர்களை நியமிக்க வேண்டிய பொறுப்பு அமைச்சருக்குரியது என்றும், நிதி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே நியமனங்களை மேற்கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு ஒரு மாத காலத்துக்குள் உறுப்பினர்கள் நியமிக்கப்படவேண்டியுள்ள நிலையில், வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன எனவும் சேவையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

# கரைச்சி பிரதேச சபை வீதியில் டிப்பர்களுக்கு விசேட வரி

கிளிநொச்சி, ஜன. 23

கரைச்சிப் பிரதேச சபையின் வீதியை பயன்படுத்த விசேட வரி அறவிடுவது தொடர்பில் விசேட அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற விசேட சபை அமர்வின்போதே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் சபைத் தலைவர் அருணாசலம் வேழமாலிகிதன் தலைமையில் அமர்வு ஆரம்பமானது.

இதன்போது கரைச்சிப் பிரதேச சபையின் வீதியை பயன்படுத்தும் ரிப்பர், டிராக்டர் போன்ற வாகனங்களில் மணல், கல், கிரவல், மண் ஆகியன ஏற்றி பயணிக்கும்போது அதற்கு வரி அறவீடு செய்வது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதற்கு அமைவாக கியூப் ஒன்றுக்கு 100 ரூபா அறவிடுவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# நுவரெலியாவில் நில அதிர்வு பதிவு

கொழும்பு, ஜன.23

நுவரெலியா, வலப்பனைப் பகுதியில் சிறிய நில அதிர்வு பதிவாகியுள்ளது. நேற்று அதிகாலை 3.29 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக புவிசரிதவியல் மற்றும் அகழ்வாராய்ச்சி பணியகத்தின் தலைவர் அனுர வல்பொல தெரிவித்தார்.

நிலநடுக்கத்தின் அளவு ரிக்டர் அளவில் 01.08 ஆக பதிவாகியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

வெற்றுப்போத்தல் சேகரித்தல்

எமது தொழிற்சாலைக்கு
சீல் இல்லாத
வட்ட போத்தல்கள்
தேவைப்படுகின்றன.
750 ml, 375 ml, 180 ml
போன்ற அளவுகளையுடைய மீண்டும் பாவிக்கக்கூடிய
வெற்றுப் போத்தல்கள்
சிறந்த விலையில் பெற்றுக்கொள்ளப்படும்.

இடம்: மானிப்பாய்
தொடர்பு: 0767171253

# சிறைக்கைதிகள் உறவினர்களுடன் ஒன்லைன் மூலம் உரையாட ஏற்பாடு

கொழும்பு, ஜன. 23

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகள் ஒன்லைன் ஊடாக தமது உறவினர்களுடன் உரையாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த இதனைத் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக கைதிகளின் உறவினர்கள் சிறைச்சாலைகளுக்கு வருவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையிலேயே தற்போது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த குறிப்பிட்டார்.

# மரண அறிவித்தல்



உதிர்வு
21.01.2021

யாழ். நயினாதீவு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், நயினாதீவு 5ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

## பரமேஸ்வரி முருகேசபிள்ளை

அவர்கள் 21-01-2021 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சி.நாகமுத்து, நாகலெட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகசபை, கற்பகம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற முருகேசபிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், சுந்தரேஸ்வரி (கனடா), நகுலேஸ்வரி, நித்தியேஸ்வரி (கனடா), நகுலேஸ்வரன் (லண்டன்), சர்வேஸ்வரி (பிரான்ஸ்), பாலேஸ்வரி, சத்தியேஸ்வரி (லண்டன்), காலஞ்சென்ற முருகதாஸ் ஆகியோரின் அருமைத் தாயாரும், முன்னைநாதன் (பொறியியலாளர்- கனடா), அம்பிகைபாகன் (ஓய்வுநிலை கிராம அலுவலர்), கனகானந்தர் (கனடா), கிருபானந்தா (பிரான்ஸ்), வரதன் (லண்டன்), விஜயலட்சுமி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சி.நா. முத்தையா, சி.நா. மதியாபரணம், சி.நா. சண்முகநாதன் மற்றும் சி.நா. நாகராசா, காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் கனகாம்பிகை (கனடா), காலஞ்சென்ற ஜெதாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இலக்குமி அம்மா, யோகம்மா மற்றும் தங்கம்மா, அமிர்தவல்லி மற்றும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, சந்திரசேகரம், பரமலிங்கம், கணபதிப்பிள்ளை, சுப்பிரமணியம், கதிரவேற்பிள்ளை (முன்னாள் நீதவான்), பரராசசிங்கம், நாகரத்தினம் மற்றும் சரஸ்வதி (ஓய்வுநிலை அதிபர்), சகாதேவன் (ஓய்வுநிலை விரிவுரையாளர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற சவுந்தரம், சுந்தரேஸ்வரி, தில்லையம்பலம் மற்றும் கனகாம்பிகை நவசக்திதேவி, ஜெயராசா, சாரதாமணி ஆகியோரின் அன்பு உடன்பிறவாச் சகோதரியும், செந்தூரன்- சஜிபா (கனடா), மேகலா- செந்தூரன் (கனடா), சர்மதா- சுதர்ஷனன் (கனடா), Dr.பார்த்திபன்- தனுஜா(ஐக்கிய அமெரிக்கா), ஸ்ரீரங்கா (கிராம அலுவலர்)- நாகேஸ்வரன் (ஆசிரியர்), சட்டத்தரணி ஸ்ரீராகவன்- கம்சத்வனி, ஸ்ரீ சுகன்யா, கௌசிகா- வனஜன் (கனடா), அபிஷன் (கனடா), Dr. கிருஸ்திகா (லண்டன்), கிருசான் (லண்டன்), நிலானி, நிலக்சன் (பிரான்ஸ்), சாயகன், சயானி(லண்டன்) ஆகியோரின் அன்புப் பேத்தியும்,

அஞ்சனா, ஆரியா, செழியன், அகிம்சன், ஆர்ஜவன், அக்சிவன், சிந்தூரா, அவிக்னன், சேனன், லக்ஸ்மி, அனுசிகா, அஸ்விகன், அக்சனா, வினிஸ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 22-01-2021 வெள்ளிக்கிழமை அன்று பி.ப 02:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் சல்லிபரவை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: **குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு**

| | | |
|---|---|---|
| நகுலேஸ்வரன் | • | Mobile : +442082863964 |
| வரதன் | • | Mobile : +442079987377 |
| முன்னைநாதன் | • | Mobile : +16475511429 |
| கனகானந்தர் | • | Mobile : +15143794007 |
| கிருபானந்தா | • | Mobile : +33980866721 |
| அம்பிகைபாகன் | • | Mobile : +94777350380 |

அன்னார் காலமானார் என்ற செய்தியை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகிறோம்.

# ஆபத்தில் கந்தன்குளம்

## கிளிநொச்சி மக்களுக்கு எச்சரிக்கை!



**கிளிநொச்சி, ஜன. 23**

**கிளிநொச்சி நகரை அண்டிய பகுதியில் அமைந்துள்ள கந்தன்குளத்தின் அணைக்கட்டின் ஊடாக பெருமளவு நீர் வெளியேறி வருவதால், அணைக்கட்டு ஆபத்தான நிலையில் உள்ளதாகவும், மக்களை அவதானமாக இருக்குமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

அணைக்கட்டின் துருசுப் பகுதியின் அருகில் குளத்திலிருந்து நீர் வெளியேறி வருகிறது. இது அணைக்கட்டின் மிக மோசமான நிலைமையாகும். தற்போது இராணுவம் மற்றும் பொதுமக்கள், நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் இணைந்து மண் மூடைகளை அடுக்கித் தடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

எனினும். சேவியர் கடைச் சந்திக்கருகில் குளத்தின் கீழ் பகுதி மற்றும் கந்தன்குளத்தின் நீர் வெளியேறுகின்ற உருத்திர புரம் பகுதியில் வாழ்கின்ற மக்களை அவதானமாக இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

### 4 மீனவர்கள் உயிரிழப்பு:

# இலங்கை அரசுக்கு இந்தியா கண்டனம்!

*கொழும்பு, ஜன. 23*

நெடுந்தீவுக் கடற்பரப்பில் கடற்படைப் படகு மோதியதில் இந்திய மீனவர்கள் உயிரிழந்த சம்பவத்துக்கு இலங்கை அரசுக்கு இந்தியா கடுமையான கண்டனத்தை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இந்திய வெளியுறவு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்திய மீனவர்கள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் இலங்கை வெளியுறவு அமைச்சருக்கு தனது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

அதேபோன்று புதுடில்லியில் உள்ள இலங்கை துணைத் தூதுவரிடமும் கடுமையான எதிர்ப்பு வெளிப்படுத்தப்பட்டது.

"உயிர் இழப்பு குறித்து எங்கள் ஆழ்ந்த வேதனையை வெளிப்படுத்திய நாங்கள், மீனவர்கள் தொடர்பான பிரச்சினைகளை மனிதாபிமானத்துடன் கையாள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினோம்" என்று இந்தியா தெரிவித்துள்ளது.

"இது தொடர்பாக இரு அரசாங்கங்களுக்கிடையில் இருக்கும் புரிந்துணர்வுகளை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும். மீண்டும் இது போன்ற சம்பவம் நிகழாமல் பார்த்துக் கொள்ள அதிக முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்," - என்றுள்ளது.

(அ)



### ரயில் தடம் புரண்டமையால் மலையக சேவைகள் பாதிப்பு

*கொழும்பு, ஜன. 23*

தெமோதர மற்றும் ஹாலி-எல பகுதிகளுக்கிடையில் பயணித்த ரயில் ஒன்று நேற்று தடம்புரண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரயில் திணைக்களம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

இதனால், மலையகத்துக்கான போக்குவரத்து சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# இரகசியமாக தடுப்பூசி போடும் அமைச்சர்கள்

## கிரியெல்ல வெளியிட்ட பரபரப்புத் தகவல்

*கொழும்பு, ஜன. 23*

அமைச்சர்கள் சிலர் வெளியில் கூறாமல் தடுப்பூசிகளை போடுவதாகக் கூறப்படுகிறது. அதனால்தான் அவர்கள் அச்சமின்றி பல்வேறு இடங்களுக்கும் செல்கின்றனர் என பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த வருடம் மார்ச் மாதம் வரை விமான நிலையம் திறக்கப்பட்டிருந்த



போதே நாட்டில் கொரோனா பரவல் ஆரம்பித்துவிட்டது. எனவே இப்போது இவர்கள் மீண்டும் விமான நிலையத்தை திறப்பதன் மூலம் கொவிட் தொற்றால் உயிரிழப்பவர்கள் இறக்கட்டும்; வாழ்பவர்களுடன் ஆட்சியை முன்னெடுத்துச் செல்வோம் என்ற போக்கில் செல்வதையே காண்பிக்கிறது - என்றார்.

# ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு விரைவில் கூடும்

*கொழும்பு, ஜன. 23*

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய பதவிகள் நியமிக்கப்பட்டு அவர்கள் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னரான முதலாவது செயற்குழுக் கூட்டத்தை எதிர்வரும் இரண்டு வாரங்களில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் கொள்கை தயாரிப்பு உள்ளிட்ட விடயங்களுக்காக செயற்குழு கூடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, தவிசாளர் வஜிர அபேவர்தன, பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன, உபதலைவர் அகில விராஜ் காரியவசம், பொருளாளர் எம்.எஸ்.எம்.மிஸ்பா ஆகியோர் தமது கடமைகளை நேற்றுமுன்தினம் பொறுப்பேற்றனர்.

எவ்வாறாயினும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான காமினி விக்ரமபெரேரா, தயா கமகே, சாகல ரத்னாயக்க, நவின் திஸாநாயக்க, அர்ஜுனா ரணதுங்க உள்ளிட்டோர் கலந்து கொள்ளவில்லை.

# வவுனியா நகர பாடசாலைகளில் 10 வீதமான மாணவர்களே வருகை

*வவுனியா, ஜன. 23*

வவுனியாவில் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் வவுனியா தெற்கு வலயத்துக்குட்பட்ட பல பாடசாலைகளில் 20 வீதமான மாணவர்களே பாடசாலைக்கு வருகை தருவதுடன் நகரப் பாடசாலைகளில் 10 வீதமான மாணவர்களே வருகை தருகின்றனர் என வவுனியா தெற்கு வலயக் கல்வி பணிப்பாளர் தெரிவித்தார்.

வவுனியா பட்டாணிச்சூர் மற்றும் நகர வியாபார நிலையங்களில் பணியாற்றும் பலருக்கு கொரோனா தொற்று பீடித்துள்ளமை உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து பல்வேறு பகுதிகள் முடக்கப்பட்டதுடன், பல பாடசாலைகளின் கல்விச்செயற்பாடுகளும் இடைநிறுத்தப்பட்டன.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை முதல் பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் மாணவர்கள் பெரிதாக பாடசாலைக்குச் செல்லவில்லை.

இது தொடர்பாக வலயக் கல்வி பணிப்பாளரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது வலயத்தில் அனைத்துப் பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் மாணவர் வரவு மிகவும் குறைவாக உள்ளது. இருந்த போதும் எமது வலயத்தில் 80 வீதமான ஆசிரியர்கள் பாடசாலைக்கு சமூகமளிக்கின்றனர். செட்டிகுளம் பிரதேச பாடசாலைகளில் மாணவர் வருகை 50 வீதமாக காணப்படுகின்றது. எனினும் நகரக்கோட்டத்திற்குட்பட்ட பல பாடசாலைகளில் 20 வீதமாகவே அமைந்துள்ளது.

அதிலும் நகரப்பகுதிகளில் அமைந்துள்ள பாடசாலைகளில் மாணவர் வருகை 10 வீதமாகவே காணப்படுகின்றது.

இதேவேளை, வெளி மாவட்டங்களிற்கு செல்லும் ஆசிரியர்களுக்கு அன்ரிஜென் பரிசோதனைகள் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார்.

(அ)

# பொதுப்போக்குவரத்தில் சுகாதார வழிமுறை பின்பற்றப்படாவிட்டால் சட்ட நடவடிக்கை

## பொலிஸ் பேச்சாளர் எச்சரிக்கை

*கொழும்பு, ஜன. 23*

பொதுப்போக்குவரத்து மற்றும் பாடசாலை மாணவர்களை ஏற்றிச்செல்லும் வாகனங்களில் உரிய சுகாதார வழிமுறைகள் பின்பற்றப்படாத பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

பொதுப்போக்குவரத்து மற்றும் பாடசாலை மாணவர்களை ஏற்றிச்செல்லும் வாகனங்களில் உரிய சுகாதார வழிமுறைகள் பின்பற்றப்படுவதில்லை என முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறு உரிய சுகாதார நியமங்களை பின்பற்றாத வாகன சாரதிகள் மற்றும் வாகன உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் சுட்டிக்காட்டினார்.



கடந்த ஒக்ரோபர் 15 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய வாகன ஆசனங்களுக்கு அமைவாக மாத்திரமே பயணிகளை ஏற்றிச்செல்ல முடியுமெனவும் அஜித் ரோஹண கூறினார்.

# வர்த்தகர்களுக்கு தொடர்ந்து அன்ரிஜென்

*வவுனியா, ஜன. 23*

வவுனியா மில் வீதி, குருசைப் பிள்ளையார் குள வீதி மற்றும் அதனை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு அன்ரிஜென் பரிசோதனை நேற்று மேற்கொள்ளப்பட்டது.

வவுனியா நகரப்பகுதியில் இதுவரை பி.சி.ஆர் பரிசோதனையை முன்னெடுக்காத ஊழியர்கள் மற்றும் வர்த்தகர்கள் என சுமார் 600 பேருக்கு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் வைத்து அன்ரிஜென் பரிசோதனை முதற்கட்டமாக நேற்று முன்னெடுக்கப்பட்டது.

அன்ரிஜென் பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்படுபவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

ஈழநாடு



# அமெரிக்க அரசியலில் முக்கியத்துவம் பெறும் கமலா ஹரிஸ்!





கமலா ஹரிஸ் அமெரிக்காவின் துணை அதிபராகியுள்ள முதல் பெண், முதல் கறுப்பின வம்சாவளியை சேர்ந்தவர், முதல் இந்திய வம்சாவளி கொண்டவர்.

இத்தனை சிறப்புகளோடு துணை அதிபராகப் பொறுப்பேற்றவர் தனது முதல் நாளில் என்ன செய்தார்? ஒரு அமெரிக்க துணை அதிபர் பணிகள் என்னென்ன?

வரலாற்று ரீதியாகச் சொல்லப் போனால் துணை அதிபர்களுக்கு ஒன்றும் பெரிதாக வேலையில்லை. அமெரிக்க துணை அதிபர் பதவி என்பது மிகவும் குறைவாக புரிந்து கொள்ளப்பட்ட, எள்ளி நகையாடப்பட்ட ஒரு பதவி. பெரும்பாலும் அமெரிக்கக் கூட்டாட்சியில் அரசமைப்புச்சட்ட ரீதியாக பெரிய பங்களிப்பு இல்லாத பதவிதான் இது. நீண்ட காலமாக இந்த பதவி இப்படித்தான் இருந்தது.

"வெளிப்படையாகக்கூறினால், அமெரிக்க துணை அதிபர் பதவி என்பது, அதிபர் இல்லாமல் போனால் அந்த இடத்தை நிறைவு செய்வதற்கான பதவி" என்கிறார் வேர்ஜினியா பல்கலைக்கழக மில்லர் மையத்தின் அமெரிக்க அதிபர் தொடர்பான ஆராய்ச்சித் துறை இயக்குநர் பார்பரா பெர்ரி.

அதிபருக்கு உயிரிழப்போ, செயல்பட முடியாத அளவுக்கு உடல் நலக்கேடோ ஏற்படாவிட்டால், வெறுமனே காத்திருப்பதுதான் அதிபரின் பணியாக இருக்கும்.

"நான் தினமும் அதிபர் பதிலளிப்பார் என்கிற நம்பிக்கையில் வெள்ளை மாளிகையின் கதவைத் தட்டுவேன்" என கடந்த 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அமெரிக்க துணை அதிபராக இருந்த ஒருவர் கூறினார் எனச் சுட்டிக்காட்டுகிறார் பெர்ரி.

அதே நேரத்தில் இந்தப் பதவியை குறைத்து மதிப்பிடவும் முடியாது. அமெரிக்காவின் 45 அதிபர்களில் 8 பேர் பதவிக் காலத்திலேயே இறந்திருக்கிறார்கள். அதாவது சுமார் 20 சதவீத அதிபர்கள், தங்களின் துணை அதிபர்களுக்கு திடீரென பதவி உயர்வு கொடுத்திருக்கிறார்கள்.

அமெரிக்க வரலாற்றிலேயே அதிகபட்சமாக 78 வயதில் அதிபராக பதவியேற்பவர் ஜோ பைடன்தான். இது அமெரிக்கத் துணை அதிபர்பதவியின்மீது அழுத்தத்தைக்கொடுக்கிறது.

1970 கள் வரை அமெரிக்காவில் துணை அதிபர்கள் அதிகம் பங்களித்ததில்லை. அதற்குப் பிறகு அதிபர் ஜிம்மி கார்ட்டர் காலத்தில் தான், துணை அதிபர்களின் பங்களிப்பு அதிகரிக்கத் தொடங்கியது.

ஜோர்ஜிஜா மாகாணத்தின் முன்னாள் ஆளுநரான ஜிம்மி கார்ட்டர், அதிக அரசியல் தொடர்பு இல்லாதவராகத்தான் அமெரிக்க அதிபர் பதவிக்கான தேர்தலில் போட்டியிட வந்தார். "தனக்கு வாஷிங்டனில் நிலவும் அரசியல் சூழல்கள் அத்தனை தெளிவாகத் தெரியாது என்பதை அவர் அறிந்திருந்தார்" என்கிறார் பெர்ரி.

எனவே அதிபர் தேர்தலில் போட்டியிடுவது உறுதி செய்யப்பட்ட பின், வால்டர் மாண்டேல் என்கிற நீண்ட கால அமெரிக்க செனட் அவை உறுப்பினரை, வாஷிங்டன் டிசியின் அரசியல் சூழலைக் விளக்குவதற்காக, துணை அதிபர் வேட்பாளராகத் தேர்வு செய்தார் ஜிம்மி கார்டர்.

அந்தக் கூட்டணி அமெரிக்காவுக்குப் புதிதாக இருந்தது. அதிபர் மற்றும் அமெரிக்க துணை அதிபர் பதவிகளில் புவியியல் ரீதியாகவோ அல்லது தத்துவார்த்த ரீதியாகவோ ஒரு சம நிலையைக் கொடுப்பதாக இருந்தது அது. அவர்களின் சாதுரியமான இந்த திட்டம் பல முறைப் பயன் படுத்தப்பட்டது.

இந்தத் திட்டம் சமீப காலங்களில் தொடர்ந்தது. பராக் ஒபாமா பெரிய அளவில் அரசியலில் அறிமுகமில்லாத புது முகமாகத் தான் களமிறங்கினார். அமெரிக்க செனட் அவையில் 35 ஆண்டு அரசியல் அனுபவம் கொண்ட ஜோ பைடனுடன் கை கோர்த்தார்.

டொனால்ட் ட்ரம்ப், மைக் பென்ஸுடன் கை கோர்த்தார். மத விவகாரத்தில் பென்ஸுக்கு இருக்கும் பெயர் ட்ரம்பின் பிம்பத்தை பாதுகாக்கும் என நம்பப்பட்டது. அதே போல தற்போது கமலா ஹரிஸ், ஜோ பைடனின் வயது, பாலினம், இனம் போன்றவைகளுக்கு ஒரு சமநிலையைக் கொடுக்கிறது.

அமெரிக்க துணை அதிபர், அமெரிக்க செனட் சபையின் தலைவராகவும் செயல்படுவார். எனவே இந்த முறை துணை அதிபர் பதவி, ஜனநாயகக் கட்சிக்கு எத்தனை முக்கியமானது என்பதை இது உணர்த்தும்.

தற்போது செனட் அவையில் ஜனநாயகக் கட்சி மற்றும் குடியரசுக் கட்சி 50 - 50 இடங்களைப் பெற்றுள்ளன. ஏதோ ஒரு பிரச்சனையில் இரு தரப்பும் 50-50 வாக்குகளை இட நேர்ந்தால், இறுதியாக அவைத் தலைவர் கமலா ஹரிஸ் தன் வாக்கை அளிப்பார். அது செனட் மேலவையில் தீர்மானிக்கும் வாக்காக இருக்கும்.

## கமலா ஹரிஸ் முதலில் என்ன செய்தார்?

பென்சில்வேனியா அவென்யூவை ஒட்டி தன் குடும்பத்தோடு பதவியேற்பு அணிவகுப்பில் நடந்து கொண்டிருந்த போது, பதவியேற்பு தொடர்பான நிகழ்வுகள் நிறைவடைந்து விட்டதை அவர் அறிந்திருந்தார்.

"நான் என் பணிக்குச் சென்று கொண்டிருக்கிறேன்" என்றார் கமலா ஹரிஸ். ஜோ பைடன் எதிர்கொள்ளும் பிரச்னைகளைச்சமாளிக்க, அவரோடு இணைய, தன்னுடைய புதிய அலுவலகமான வெள்ளை மாளிகைக்கு வந்தார் கமலா ஹாரிஸ்.

பைடனின் திட்டங்களுக்கு நேர்த்தியான வடிவம் கொடுக்க, அதிகாரப் பகிர்வின்போது எல்லா முக்கிய சந்திப்புகளின் போதும், கமலா ஹரிஸும் இருந்தார். அதேபோல கடந்த புதன்கிழமை புதிய அதிபர் ஜோ பைடன் கையெழுத்திட்ட 15 நிர்வாக ஆணைகளை உருவாக்குவதில் கமலா ஹாரிஸின் பங்கு இருந்தது.

வெள்ளை மாளிகைக்கு வந்த பின், அதிக நேரம் எடுத்துக் கொள்ளாமல், செனட் அவைக்குச் சென்று தன் செனட் அவைத் தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டார். மூன்று செனட் உறுப்பினர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

கமலா ஹரிஸ் இன்னும் அமெரிக்க துணை அதிபருக்கான இல்லத்தில் குடியேறவில்லை. இப்போதும் தன்னுடைய பழைய வீட்டிலேயே தான் இருக்கிறார்.

கடந்த வியாழக்கிழமை காலையில் இணைய வழியாக நடத்தப்பட்ட பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்து கொண்டார். தினசரி கொடுக்கப்படும் உளவுத்துறை அறிக்கை ஒன்று அவருக்கு வழங்கப்பட்டது.

## கமலா ஹரிஸ் எங்கே தங்குவார்?

கமலா ஹரிஸ் மற்றும் அவரது கணவர் டக் எம்ஹாப், 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு வெள்ளை மாளிகையில் (இதையும் வெள்ளை மாளிகை என்று தான் கூறுகிறார்கள்) குடியேறுவார்கள். இந்த மாளிகை, வட மேற்கு வாஷிங்டன் பகுதியில், அமெரிக்க கடற்படை ஆய்வகத்துக்கு அருகில் இருக்கிறது.

இந்த துணை அதிபர் வீடு, வெள்ளை மாளிகைக்கு அருகில் தான் இருக்கிறது. அதே போல கமலாவின் கணவர் டக் எம்ஹாப்பயிற்றுவிக்கப்போகும் ஜோர்ஜ்டவுன்பல்கலைக் கழகத்தின் சட்டப் பள்ளியும் அருகில் தான் இருக்கிறது.

துணையதிபர் மற்றும் அவரது கணவர் பயணிக்க ஒரு போயிங் 757 ஏர் போர்ஸ் 2 விமானம் இருக்கும். அதோடு அவர்களுக்கு 24 மணி நேரமும் பாதுகாப்பு வழங்கப்படும்.

## பைடன் - கமலா ஹரிஸ் இடையில் நல்லுறவு இருக்குமா?

ஒபாமா மற்றும் பைடன், அதிபர் மற்றும் துணையதிபராக வெள்ளை மாளிகையில் இருந்தபோது, தங்கள் நட்பை பல முறை வெளிப்படுத்தினார்கள். அதிபர் மற்றும் துணை அதிபருக்கிடையில் தனிப்பட்ட முறையில் நல்ல நட்பு இருக்க வேண்டும் என்பது தேவையான ஒன்றாகக் கருதப்படவில்லை என்கிறார் பெர்ரி.

ஆனால் கடந்த ஆண்டின் கோடைக் காலத்தில் கமலா ஹரிஸை, துணையதிபர் வேட்பாளராக அதிகாரபூர்வமாக அறிவித்தபோதிலிருந்து நல்லபடியாக பயணிப்பது போலத் தான் தெரிகிறது என்கிறார் பெர்ரி.

"கமலா ஹரிஸுடன் கலந்து பேசாமல், இந்த நிர்வாகம் தொடர்பாக நான் இதுவரை ஒரு முடிவைக் கூட எடுத்ததில்லை" எனக் கூறினார் ஜோ பைடன். பைடனின் அமைச்சரவையில் இடம் பெறவிருக்கும் ஒவ்வொருவரையும், கமலா ஹரிஸும் நேர்காணல் செய்தார்.

கமலா ஹாரிஸ், ஜோ பைடனின் மகன் பியா பைடனுடன் நெருக்கமாக இருந்தது குறிப்பிடத்தக்கது. பியா பைடன் மூளைப் புற்றுநோயால் கடந்த 2015ஆம் ஆண்டு இறந்துவிட்டார். எனவே இவர்களுக்கு இடையிலான நட்பு ஒரு அர்த்தமுள்ளதாக இருக்கிறது.

ஜனநாயகக் கட்சிக்குள்ளேயே, அதிபர் வேட்பாளருக்காக பைடன் மற்றும் கமலா ஹரிஸ் போட்டி போட்டுக் கொண்ட போது, மேடை விவாதத்தில் கமலா ஹரிஸ், பைடனை தாக்கியதை நினைத்துப் பார்ப்பவர்களுக்கு இது ஆச்சர்யமாக இருக்கும். "நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்" என பைடன் கூறியதைச் சுட்டிக் காட்டுகிறார் பெர்ரி.

## கமலா ஹரிஸ்'க்கு எவ்வளவு அதிகாரமிருக்கும்?

பைடன் துணையதிபராக இருந்தபோது எப்படி இருந்தாரோ அப்படி, கமலா ஹரிஸின் பங்களிப்பை பைடன் கோரலாம். 2020 ஜனநாயகக் கட்சியின் தேசிய மாநாட்டில், தனது துணையதிபர் வேட்பாளராக கமலா ஹரிஸை அறிமுகப் படுத்தியபோது, 2008இல் பராக் ஒபாமாவால் தான் தேர்ந்தெடுக்கப்பட்டதை நினைவு கூர்ந்தார் பைடன்.

துணை அதிபர் பதவியிலிருந்து பைடன் என்ன விரும்புகிறார் என ஒபாமா கேட்டார்.

"முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு முன்பு அறையில் கடைசி நபராக இருக்க விரும்புகிறேன்" என நான் ஒபாமாவிடம் கூறினேன் என்றார் பைடன்.

"அதைத்தான் நான் கமலாவிடம் கேட்டேன். எப்போதும் என்னிடம் உண்மையைச் சொல்ல, அறையில் கடைசி குரலாக கமலா இருக்க வேண்டும் எனக் கேட்டேன்" என்றார் பைடன்.

## என்ன மாதிரியான துணையதிபராக இருப்பார் கமலா?

அமெரிக்க அதிபர் வேட்பாளராக வர கமலா ஹரிஸ் மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்தாலும், அது அவருக்கென தனி ரசிகர் வட்டாரம் உருவானது. இந்த ரசிகர்கள் தங்களை #KHive என அழைத்துக் கொள்கிறார் கள். கமலா ஹரிஸ் தன் வழியில் ஓர் அரசியல் நட்சத்திரமாகவே பைடனுடன் இணைந்தார்.

ஜனநாயகக்கட்சியில் இருக்கும் இடது சாரிகளின் தொடர் விமர்சனத்துக்குப் பிறகும், கமலா ஹரிஸ் செனட் அவையில் மிகவும் சுதந்திரமாகவே வாக்களித்தார். இப்படி செனட் அவையில் சுதந்திரமாக கட்சி சார்பின்றி வாக்களித்த செனட்டர்களில் கமலா ஹரிஸும் ஒருவர்.

ஒருபாலின உறவுக்காரர்கள் உரிமைகள், குடியேற்றம், மரிஜுவானாவை சட்டப்பூர்வமாக்குவது, துப்பாக்கி கட்டுப்பாடுகள் போன்ற விடயங்களில் முற்போக்காகச் சிந்தித்து வாக்களித்தார்.

அவர் செனட் அவைக்கு வருவதற்கு முன் கலிபோர்னியாவின் முன்னணி வழக்குரைஞர்களில் ஒருவராக பணியாற்றினார். அதிபராக பராக் ஒபாமாவும் துணை அதிபராக ஜோ பைடனும். இருவருக்கும் இடையிலான நட்பு புகழ் பெற்றது.

கடந்த கோடை காலத்தில் கருப்பினத்தவர்களின் உயிர் முக்கியம் என்கிற மக்கள் போராட்டத்துக்கு, கமலா ஹாரிஸ் தன் ஆதரவைத் தெரிவித்தார். அதோடு அமெரிக்காவில் காவல் துறையை பரிசீலணை செய்து மறுவடிவமைப்புச் செய்ய வேண்டும் என்றார்.

ஆனால், பல விடயங்களில் முதல் துணையதிபராக பதவியேற்றிருக்கும் கமலா ஹரிஸ் மீது நிறைய எதிர்பார்ப்புகள் வைக்கப்பட்டிருக்கின்றன. "நான் அமெரிக்காவின் முதல் பெண் துணையதிபராக இருக்கலாம், ஆனால் நான் நிச்சயம் கடைசி பெண் துணையதிபராக இருக்கமாட்டேன்" என்கிறார் கமலா. இந்த வரலாற்று நிகழ்வு கறுப்பின அமெரிக்கர்கள் கொண்டாடுவதற்கான நேரம் தான் என்கிறார் 'கலர் ஒவ் சேஞ்ச்' என்கிற இன நீதி அமைப்பின் மூத்த இயக்குநர் ஜெனீபர் எட்வர்ட்ஸ். ஓரினத்தில் இருந்து ஒருவர் பிரதி நிதித்துவப்படுத்தப்படுவதால் மட்டுமே மாற்றங்கள் நிகழ்ந்து விடாது என்பதை நாங்கள் காலங் காலமாக கற்று வந்திருக் கிறோம்" என்கிறார்.

"நூற்றுக்கணக்கான ஆயிரக் கணக்கான கறுப்பினப் பெண்கள் போராடி, ஒருங்கிணைந்து, வாக்களித்து இந்த நிலையை அடைந்திருக்கிறோம். தற்போது கமலா ஹரிஸை துணையதிபராக்கிய மக்களின் தேவைகளை பிரதிநிதித்துவப்படுத்த வேண்டிய பொறுப்பு அவருக்கு இருக்கிறது" என்கிறார்.

பைடன் அடுத்த முறை அதிபர் பதவிக்கு போட்டியிட மாட்டார் என்பது ஹரிஸுக்கு ஒரு சமநிலைப்படுத்துவதாக இருக்கும். இப்போது பைடனுக்கு எப்படி ஒரு விசுவாசமான கூட்டாளியாக இருப்பது, அதே நேரத்தில் தனது அதிபர் பதவிக்கான தயாரிப்புகளை எப்படி முன்னெடுப்பது என்பது தான் கமலா ஹரிஸ் முன் இருக்கும் கேள்விகள் என்கிறன சில செய்திகள். ■

# விழி திறந்த தோழர் ஜெமினி என்ற தேனீ



**-எம்.ஆர். ஸ்ராலின் ஞானம்**

கடந்த இருபதுவருட காலத்தில் தமிழ் சூழலில் இயங்கிவந்த இணையத்தளங்களின் வரிசையில் ‘தேனீ ‘ என்னும் இணையத் தளம் மறக்கமுடியாததொன்றாகும். அந்த காலங்களில் குறிப்பாக புகலிடங்களில் இருந்து மட்டுமே இணையத்தளங்களை நடத்துவது சாத்தியமானதாகவிருந்தது.

அதிலும் இலங்கை தமிழ் அரசியல் மற்றும் இலக்கிய சூழல் சார்ந்து பொதுசன அபிப்பிராயத்துக்கு மாற்றானதாக கருதப்படும் செய்திகளை அல்லது கட்டுரைகளை வெளியிடுவதற்கான இணையத்தளங்கள் மிக அரிதாகவே காணப்பட்டன. தமிழ் தேசியம் என்கின்ற கோதாவில் தனியொரு அமைப்பினரின் பிரசார தளங்களாகவே எல்லாவித இணையத்தளங்களும் காணப்பட்டன. யுத்தகால செய்திகளை வெளியிட்டு புகழ் பெறுவதில் பல இணையங்கள் நான் முந்தி நீ முந்தி என்று செயற்பட்டன. வேறு சில இணையங்களோ மெய்சிலிர்க்கும் யுத்த ஆருடம் சொல்லுகின்ற ஆய்வுகளை வெளியிடுவதில் புகழ்பெற்றனவாயிருந்தன. ‘உள்ளேவிட்டு அடிக்கின்ற’ யுத்த தந்திர கட்டுரைகள் ஊடாக பல திடீர் இராணுவ ஆய்வாளர்களை தமிழ் கூறும் நல்லுலகுக்கு தந்தவையும் இத்தகைய இணையத்தளங்களேயாகும்.

அதேபோல சில இணையங்கள் ‘தமிழ் தேசிய துரோகி’களை இனம்காணவென்றே நடத்தப்பட்டன. அவர்கள் மீது சேறடிக்கவும் பொய் குற்றச்சாட்டுக்களை அள்ளிவீசவும் அதையும் தாண்டி மரணதண்டனை எச்சரிக்கை விடுப்பதற்காகவும்கூட இத்தகைய தளங்கள் நடத்தப்பட்டன.

விசேடமான சில இணையங்களோ ‘சா’ வீட்டு செய்திகளை வெளியிடுவதில் புகழ்பெற்றிருந்தன. ஒரு செய்தியையோ கட்டுரைகளையோ பிரசுரிப்பதில் பேணப்படவேண்டிய ஊடக தர்மம் பற்றி எள்ளளவிலும் கவலைகொள்ளாத வெறும்பயல்களால் நிரம்பியிருந்தன தமிழ் இணையத்தளங்களின் ஆசிரியபீடங்கள்.


இத்தனைக்கும் மத்தியில்தான் ஒரு மனிதன் ஜெர்மனியிலிருந்து தேனீ என்கின்ற ஒரு இணையத்தளத்தை நடத்திக்கொண்டிருந்தான். ஆனால் அந்த இணையமோ இவையனைத்திலுமிருந்து முற்றாக வேறுபட்டு நின்றது. தமிழ் சூழலில் வெளியிடமுடியாத பல கருத்துக்களுக்கு இடம் தந்தது தேனீ. யுத்தகாலத்தில் கொல்லப்படுபவர்களின் எண்ணிக்கையை வைத்து அதில் பிழைப்பு நடத்தும் பிழைப்புவாத இணையமாக அது இருக்கவில்லை. யுத்தத்தின் பிடியில் சிக்கித்தவித்த மக்களின் வாழ்வியல் துயரங்களை சுமந்து நின்றன தேனீயின் பக்கங்கள். மனித வாழ்வின் உன்னதங்களை தொலைத்துவிட்டு மாவீரம் பேசுவது கடைந்தெடுத்த கயமைத்தனம் என்று எழுந்த குரல்களின் நியாயங்களை உயர்த்திப்பிடித்தது தேனீ. அத்தகைய கட்டுரைகளை தேடித்தேடி பிரசுரிக்க அது தவறவில்லை. சம்பவங்களை செய்திகளாக்கி பிரசுரிப்பதை விடுத்து குறித்த சம்பவங்களின் பின்னணிகளை அலசி ஆராய்ந்து எழுதப்படுகின்ற ஆய்வுக்கட்டுரைகளை படிப்பதற்கென்றே தேனீயின் வாசகர்கள் புகலிடமெங்கும் இருந்தார்கள்.

அதுமட்டுமன்றி இலங்கை இந்தியாவில் அரசியல், இலக்கிய பரப்பில் இருக்கக் கூடிய பலர் தேனீயின் தீவிர வாசகர்களாய் இருந்தனர்.

அவ்வேளைகளில் புகலிட இலக்கியத்தின் முக்கிய வெளிப்பாடுகளான இலக்கிய சந்திப்பு மற்றும் பெண்கள் சந்திப்பு போன்ற நிகழ்வுகளை துரோக முத்திரை குத்தி தமிழ் தேசிய நியாயவாதிகள் காட்டுக்கூச்சல் போட்டனர். ஆனால் சர்வதேச ரீதியாக பரந் திருந்த தமிழ் வாசகர்களுக்கு விலாவாரியாக இத்தகைய சந்திப்பின் தாற்பரியங்களை தரிசிக்கும் வாய்ப்புகளை தேனீயின் பக்கங்களே வழங் கின.

யுத்தத்தில் பாதிப்புற்ற மக்களின் சார்பில் மனிதஉரிமைக்காக குரல் எழுப்புதல் ‘துரோகத்தனம்’ என்று அடித்து ஆணியறைந்து பிரசித்தம் பண்ணியவர்களுக்கு பயந்து தேனீ தனது பக்கங்களை ஒருபோதும் மூடிக்கொண்டதில்லை. சகோதரப்படுகொலைகளில் நசுக்கப்பட்டு கிடந்த குரலற்றவர்களுக்கான குரலாக தன்னை அடையாளப்படுத்தி நின்றது தேனீ. இலங்கை முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட பள்ளிவாசல் படுகொலை மற்றும் யாழ்ப்பாண இனச்சுத்திகரிப்பு என்பன மானுடகுலத்துக்கு எதிரான யுத்தக் குற்றங்கள் என்பதை உரத்துச்சொன்ன எழுத்தாளர்களுக்கு தேனீயின் பக்கங்கள் ஒருபோதும் எல்லை விதிக்கவில்லை. அரச பயங்கரவாதத்தால் நிகழ்த்தப்பட்ட தமிழ் மக்கள் மீதான படுகொலைகளின் வலிகளை மட்டுமல்ல வெருகல் படுகொலையினதும் வலிகளை பேசும் வாய்ப்புகளை வழங்கிய விரல்விட்டு எண்ணக்கூடிய ஊடகங்களில் தேனீ முதன்மையாய் இருந்தது.

அரசியல், இலக்கியம், வரலாறு, நூல்விமர் சனங்கள், சினிமா, மொழிபெயர்ப்புகள் சார்ந்த கட்டுரைகளுடன் மாக்ஸிஸம், பெண்ணியம், தலித்தியம், பின்நவீனத்துவம், சூழலியல் என்று பலதரப்பட்ட கருத்தாக்கங்கள் பற்றிய ஆயிரக்கணக்கான கட்டுரைகளை தேனீ வெளியிட்டுள்ளது. ஒரு ஊடகவியலாளனுக்கு இருக்கவேண்டிய பக்குவமும், மனோதிடமும், பொறுப்புணர்வும், எப்படியிருக்கவேண்டு மென்பதை இந்த தேனீ ஆசிரியர் தோழர் ஜெமினியின் வாழ்வில் இருந்து தமிழ் சமூகம் கற்றுக்கொள்ள வேண்டும். ●



# விண்வெளியில் இருந்து காட்டு யானைகளை எண்ணும் தொழில்நுட்பம்

செயற்கைக்கோள் படங்களை முதலில் பார்க்கும் போது பச்சை நிறப் பிளவுகளுக்கு மத்தியில், சாம்பல் நிறக் குமிழ்கள் இருப்பது போலத் தோன்றின. ஆனால், நெருக்கமாக அப்படத்தை ஆய்வு செய்தால், அக்குமிழ்கள் மரங்களுக்கிடையில் அலைந்து திரியும் யானைகள் எனத் தெரிய வந்தன.

விஞ்ஞானிகள் இந்த படங்களை ஆபிரிக்க யானைகளைக் கணக்கிட பயன்படுத்துகின்றனர்.

புவியின் மேற்பரப்பிலிருந்து 600 கிலோமீற்றர் தொலைவில் தன் சுற்று வட்டப்பாதையில் புவியைக் சுற்றிக் கொண்டிருக்கும் செயற்கைக்கோள்களிலிருந்து இந்தப் படங்கள் வருகின்றன.

இந்த தொழில்நுட்பத்தால், மேக மூட்டம் இல்லாத ஒரு நாளில், 5,000 சதுர கி.மீ வரை யானைகளின் வாழ்விடத்தை கணக்கிடுவதற்கான சாத்தியமிருக்கிறது.

யானை எண்ணும் பணிகள் இயந்திர கற்றல் (Machine Learning) மூலம் செய்யப்படுகிறது. பலவிதமான பின்னணிகளில் யானைகளை அடையாளம் காண ஓர் அல்காரிதத்துக்கு பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது.

“இது ஒரு யானை, இது யானை அல்ல என நாங்கள் சில எடுத்துக்காட்டுகளை முன்வைத்துக் கூறுகிறோம்” என பாத் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஓல்கா இசுபோவா கூறினார்.

“இப்படிச் செய்வதன் மூலம், நம் சதாரணக் கண்களால் பார்க்க முடியாத சின்னச் சின்ன விவரங்களைக் கூட அடையாளம் காண இயந்திரத்துக்கு பயிற்சியளிக்க முடியும்” என்கிறார் ஓல்கா.

விஞ்ஞானிகள் முதலில் தென்னாபிரிக்காவில் இருக்கும் அட்டோ தேசிய யானைகள் பூங்காவைப் பார்த்தார்கள்.

“இந்த யானைகள் பூங்காவில், யானைகள் அதிகளவில் வாழ்கின்றன” என ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக பாதுகாப்பு விஞ்ஞானி முனைவர் இஸ்லா டுபொர்கே கூறினார்.

“இங்கு மரம் அடர்ந்த பகுதிகளும், சவானா எனப்படும் மரம் அருகிய புல்வெளிகளும் உள்ளன. எனவே எங்கள் அணுகுமுறையை சோதிக்க இது ஒரு நல்ல இடம். இந்த முயற்சிக்கு இது ஒரு நல்ல சான்றாக அமைந்தால், இதை செயல் படுத்தத் தயாராகிவிடலாம்” என்கிறார் இஸ்லா.

“ஏற்கனவே பாதுகாப்பு அமைப்புகள் விமானங்களைப் பயன்படுத்தி கணக்கெடுப்பதற்கு பதிலாக, இந்த முறையைப் பயன்படுத்த ஆர்வமாக உள்ளன” எனவும் கூறினார். வணிகச் செயற்கைக்கோள்கள் எடுக்கும் படங்களைப் பெற, இயற்கை மற்றும் வன விலங்கு பாதுகாப்பு அமைப்புகள் பணம் செலுத்த வேண்டும்.


பல நாடுகளின் எல்லைகளை உள்ளடக்கிய யானைகளின் வாழ்விடங்களில் விமானங்களைப் பயன்படுத்தி கணக்கெடுப்பதற்கு அனுமதி பெறுவது மிகவும் சிக்கலானது. அப்படிப்பட்ட பகுதிகளில் அருகி வரும் யானைகளின் எண்ணிக்கையைக் கண்காணிக்கும் பணியை இது கணிசமாக மேம்படுத்தும்.

**அதிநவீன தொழில்நுட்பம்**

விலங்குகள் வேட்டையாடப்படுவதைத் தடுக்கும் பணிகளுக்கும் இதைப் பயன்படுத்தப்படலாம் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

“இந்தப் படங்களை நீங்கள் விண்வெளியில் இருந்து எடுக்க முடியும் என்பதால், உங்களுக்கு யானைகள் நடமாடும் வனப்பகுதியில் ஆட்கள் இருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை. குறிப்பாக கொரோனா வைரஸ் நெருக்கடி நிலவும் இந்த காலத்தில் இது மிகவும் உவியாக இருக்கும்” என்கிறார் முனைவர் இஸ்லா.

“விலங்கியலைப் பொறுத்தவரை, தொழில்நுட்பம் மிகவும் மெதுவாக நகரும். எனவே விலங்குகளின் பாதுகாப்புக்கு அதிநவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவது மிகவும் நன்றாக இருக்கிறது” என் கிறார் இஸ்லா.



ஈழநாடு



# பாதுகாப்பு முன்னுரிமையுடன் 73 ஆவது சுதந்திர தினம்



கொழும்பு,ஜன.23

73 ஆவது தேசிய சுதந்திர தின வைபவத்தை இம்முறையும் சிறந்த முறையில் நடத்தத் தேவையான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம்முறை சுகாதார வழிமுறைகளை முழுமையான முறையில் பின்பற்றிய நிலையில் எவ்வித குறைப்பாடுகளும் இன்றி தேசத்தின் அபிமானத்தை காக்கும் வகையில் வழமை போன்று கம்பீரமான முறையில் நடத்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என பாதுகாப்புச் செயலாளர், தேசிய பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார்.

நாட்டில் தற்போது நிலவும் கொரோனா தொற்று அச்ச நிலைமையைக் கருத்தில் கொண்டு அழைப்பிதழ்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் வருகை தரும் பிரமுகர்களின் எண்ணிக்கையும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன எனவும் அதேபோன்று அணிவகுப்பில் கலந்து கொள்ளும் முப்படை வீரர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கையும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த சுதந்திர தின நிகழ்வு மற்றும் மரியாதை அணிவகுப்பு ஆகியவற்றில் கலந்து கொள்ளும் அனைவரும் பி.சி.ஆர். அல்லது அன்ரிஜென் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர் இதுதொடர்பில் யாரும் பயப்படத் தேவையில்லை. இதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எதிர்வரும் 73ஆவது சுதந்திர தின விழா ஏற்பாடுகள் தொடர்பில் மீளாய்வு செய்யும் வகையில் சுதந்திர சதுக்கத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தின் போது பாதுகாப்புச் செயலாளர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சுதந்திர தினக் கொண்டாட்டங்களை சுமுகமாக நடத்துவது தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் விரிவாக கலந்துரையாடியதுடன், சுதந்திர தின கொண்டாட்டத்துக்கான ஒரு பாதுகாப்பான சூழலை உருவாக்க முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் மற்றும் அரச அதிகாரிகளுக்குத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்கினார். (எ)

# தமிழ் மக்களுக்கு எதிராக அடக்குமுறை தொடர்கிறது

## பிரான்ஸ் எம்.பிக்கள் 21 பேர் ஜனாதிபதிக்கு அவசர கடிதம்



பாரிஸ்,ஜன.23

**இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராகத் தொடரும் அடக்கு முறைகளை முடிவுக்கு கொண்டு வர பிரான்ஸ் தனது அனைத்துச் செல்வாக்கையும் பயன்படுத்த வேண்டும் என பிரான்ஸின் 21 பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

**பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவல் மக்ரோனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர்கள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.**

இலங்கையில் தமிழ் மக்கள் பாதுகாப்பாக வாழ்வதை உறுதி செய்வதற்காக பாதுகாப்புச் சபை உறுப்பினர் என்ற அடிப்படையில் பிரான்ஸ் தனது அனைத்து செல்வாக்கையும் பயன்படுத்த வேண்டும் என அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பிரான்ஸ் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில், இலங்கையில் தமிழ்ச் சமூகத்தினர் தற்போது எதிர்நோக்குகின்ற அச்சம்மிகுந்த சூழ்நிலை தொடர்பில் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யுத்தக்குற்றங்கள் தொடர்பில் விசாரணைக்கு வழிவகுக்கக்கூடிய, தங்கள் நிலங்கள் சொத்துக்களை இழந்த மக்களின் சார்பில் இழப்பீட்டு நடைமுறைகளை உருவாக்கக் கூடிய நிலைமாறுகால நீதிப் பொறிமுறையொன்றை இலங்கை அரசாங்கம் உருவாக்கத் தவறிவிட்டது எனவும்

இலங்கையில் தமிழ் மக்களின் நிலை தற்போது மோசமடைகின்றது என்பதை வலியுறுத்தியுள்ள பிரான்ஸின் 21 பாராளுமன்ற உறுப்பினர்களும் குரோத பேச்சுக்கள் மீண்டும் வெளிப்பட தொடங்கியுள்ளன எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ)

# தப்பிச்சென்ற கொரோனா தொற்றாளர் கைது

கொழும்பு,ஜன.23

கட்டுநாயக்கா வலான கொடை பிரதேசத்தில் தப்பிச் சென்ற கொரோனா வைரஸ் தொற்றாளர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை கட்டுநாயக்கா 18 ஆம் தூண் பிரதேசத்தில் வைத்து இந்த நபர் கைது செய்யப்பட்டார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (எ)



# வவுனியாவில் ஹெரோயினுடன் 4பேர் கைது

வவுனியா ஆசிக்குளம் பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த நான்கு பேரை வவுனியா பிராந்திய போதைத்தடுப்புப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இந்தப் பகுதியில் போதைப் பொருள் பயன்பாடு இடம் பெற்றுவருவதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய அப்பகுதியில் சோதனைகளை முன்னெடுத்த பொலிஸார் மூன்று கிராம் ஹெரோயின் போதைப்பொருளை மீட்டுள்ளனர்.

அதனை உடைமையில் வைத்திருந்தனர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அதேபகுதிகளைச் சேர்ந்த நான்கு பேரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். (எ)

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல்**

# 73 பேர் சி.ஐ.டி. பொறுப்பில் 195 பேர் விளக்கமறியலில்

கொழும்பு,ஜன.23

30 வெளிநாட்டவர்கள் உட்பட 268 பேர் கொல்லப்பட்ட, 27 வெளிநாட்டவர்கள் உட்பட 594 பேர் காயமடைந்த உயிர்த்த ஞாயிறு தின தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இலங்கையில் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி 8 இடங்களில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பிலான குற்றவியல் விசாரணைகள் பெரும்பாலும் நிறைவடைந்துள்ளன எனத் தெரிவித்த அஜித் ரோஹண, முழுப் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பிலும் இடம் பெறும் ஆழமான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் கூறினார்.

இதன்படி இந்தப் பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில் 268 சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அதில் 195 பேர் தற்போது விளக்கமறியலில் உள்ளனர்.

ஏனைய 73 பேரும் தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் இடம்பெறும் பிரதான விசாரணைகளை முன்னெடுக்கும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரின் பொறுப்பில், பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர்.

முன்னதாக கொழும்பு, நீர்கொழும்பு மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் கடந்த 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி 8 தொடர் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் பதிவாகின.

கரையோர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம், நீர்கொழும்பு, கட்டான பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கட்டுவப்பிட்டி புனித செபஸ்ரியார் தேவாலயம், மட்டக்களப்பு புனித சியோன் தேவாலயம் ஆகிய கிறிஸ்தவ தேவாலயங்களும் கொழும்பு காலி முகத்திடலுக்கு சமீபமாகவுள்ள ஷங்கரில்லா, சினமன் கிராண்ட், கிங்ஸ்பெரி ஆகிய ஐந்து நட்சத்திர ஹோட்டல்களிலும் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

மேற்படி ஆறு தாக்குதல்களும் இடம்பெற்றது ஏப்ரல் 21 ஆம் திகதி காலை 8.45 மணிக்கும் 9.30 மணிக்கும் இடையிலான 45 நிமிட இடைவெளியிலேயே ஆகும்.

அதேதினம் பிற்பகல் 1.45 மணியளவில் தெஹிவளை பொலிஸ் பிரிவின் மிருகக் காட்சி சாலைக்கு முன்பாக உள்ள "நியூ ட்ரொபிகல் இன்" எனும் சாதாரண தங்கு விடுதி கொண்ட ஹோட்டலில் குண்டு வெடிப்புச் சம்பவம் பதிவானது. அதனைத் தொடர்ந்து பிற்பகல் 2.15 மணியளவில், குண்டுவெடிப்புடன் தொடர்புடையதாகக் கூறப்படும் சந்தேக நபர்கள் தொடர்பிலான விசாரணைக்கு சென்ற கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளை இலக்கு வைத்து தெமட்டகொடை மஹவில கார்டின் பகுதி சொகுசு வீட்டில் பெண் தற்கொலை குண்டுதாரியால் தாக்குதல் நடத்தப்பட்டது. (எ)

# இந்தியாவிலிருந்து தடுப்பூசி பெற இலங்கை அடுத்த கட்ட நடவடிக்கை

கொழும்பு,ஜன.23

இந்தியாவிலிருந்து கொரோனா தடுப்பூசியைப் பெறுவதற்கான பொருத்தமான ஆவணங்கள், சட்ட ஒப்புதலுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

ஆவணங்கள் அனைத்தும் அனுப்பப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தினார். (எ)



# எது நடக்கக்கூடாது என்று விரும்பினேனோ துரதிர்ஷ்டவசமாக அதுவே நடந்திருக்கிறது

## இந்திய மீனவர்கள் உயிரிழப்பு அமைச்சர் டக்ளஸ் வேதனை



யாழ்ப்பாணம்,ஜன.23

**எது நடக்கக் கூடாது என்று விரும்பினேனோ துரதிஷ்டவசமாக அது நடந்திருக்கின்றது, இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிந்த போது எற்பட்ட துன்பகரமான சம்பவத்தில் சிக்கி நான்கு இந்தியக் கடற்தொழிலாளர்கள் காணாமல்போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்ட நிலையில் நால்வரது சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன என்ற செய்தி மிகுந்த வேதனையை ஏற்படுத்துகின்றது என கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்:

இவ்வாறான இழப்புக்கள் பலவற்றை கடந்து வந்த அனுபவத்தின் அடிப்படையில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரதும் உறவினர்களினதும் உணர்வுகளைப் புரிந்து கொள்கின்றேன். அவர்களை சூழ்ந்திருக்கும் துன்பக் கடலிலிருந்து அவர்கள் மீண்டு வரவேண்டும் என்பதே என்னுடைய எதிர்பார்ப்பாகும்.

இலங்கையின் கடற்தொழில் அமைச்சராக பதவியேற்றுக் கொண்டதிலிருந்து, இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய சட்டவிரோத செயல்பாடுகள் நிறுத்தப்பட்டு இலங்கை மீனவர்களும், எமது உறவுகளான இந்திய மீனவர்களும் பாதிக்கப்படாத வகையில் இரண்டு தரப்பினரும் இணங்கிக் கொள்ளும் வகையிலான பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதை வலியுத்தி வந்தேன்.

அவ்வாறு வலியுறுத்தியதுடன் மட்டும் நின்று விடாது, அதுதொடர்பான முன்வரைவு ஒன்றைத் தயாரித்திருந்தேன்.

கடந்த வருடம் ஜனவரி மாதம் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இந்தியா வுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட போது இந்தியப் பிரதமரிடமும் கையளித்திருந்தேன். இந்தியத் தரப்பினரும் இந்தத் திட்டத்தை வரவேற்றிருந்தனர்.

எனினும் துரதிஷ்டவசமாக ஏற்பட்ட கொரோனா தொற்று அச்சத்தால் அதனை முன்கொண்டு செல்ல முடியவில்லை.

அண்மைக்காலமாக இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய செயல்பாடுகள் அதிகரித்திருந்த நிலையில், இந்த செயல்பாடுகள் தொடரும் பட்சத்தில் இலங்கை - இந்தியக் கடல்தொழிலாளர்களுக்கு இடையில் கடலில் மோதல் ஏற்பட்டு விரும்பத்தகாத நிகழ்வுகள் ஏற்பட்டு விடும் என்பதை தொடர்ந்து வலியுறுத்தி வந்தேன். எது நடக்கக் கூடாது என்று விரும்பினேனோ, துரதிஷ்டவசமாக அது இப்போது நடந்திருக்கின்றது.

உயிரிழந்தவர்கள் இந்தியக் கடற்தொழிலாளர்களாக இருப்பினும், அவர்களும் என்னுடைய தொப்புள் கொடி உறவுகள். கடந்த காலங்களில் நாம் துன்பத்தை சுமந்த வேளைகளில் எல்லாம் எமக்காக உரிமையுடன் குரல் கொடுத்தவர்கள் - எமக்காகத் துடிப்பதற்கு பாரத தேசம் இருக்கின்றது என்ற நம்பிக்கையை எமக்கு இன்றும் ஏற்படுத்திக் கொண்டிருப்பவர்கள்.

அவ்வாறானவர்களுக்கு இன்னல் ஏற்படுவதை என்னால் எவ்வாறான சூழலிலும் தாங்கிக் கொள்ள முடியாது.

நடைபெற்ற சம்பவம் தொடர்பில் பல்வேறு தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

எனினும், இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் நடப்பதை தடுக்கும் நோக்கில் உண்மையில் நடந்தது என்ன என்பதை அறிந்து கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை பொறுப்புள்ள அமைச்சர் என்ற வகையில் மேற்கொண்டுள்ளேன்.

அதேவேளை உணர்ச்சிவசப்பட்ட முடிவுகள் எந்தளவுக்கு இழப்புக்களையும், அழிவுகளையும் ஏற்படுத்தும் என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்து கொண்டவன் என்ற அடிப்படையில், இந்தியக் கடற்தொழிலாளர்களும் இச்சந்தர்ப்பத்தில் உணர்ச்சி வசப்படாது புத்திசாதுரியமாக எதிகால நடவடிக்கைகளை திட்டமிட வேண்டும் என்பதே என்னுடைய எதிர்பார்ப்பாகும்.

எவ்வாறிருப்பினும், இவ்வாறான சம்பவங்கள் முழுமையாக தடுக்கப்பட வேண்டுமாயின் இந்திய கடற்தொழிலாளர்களின் எல்லை தாண்டிய தொழில் செயல்பாடுகள் தொடர்பான பிரச்னை நிரந்தரமாக தீர்க்கப்பட வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றேன்- என்று குறிப்பிட்டுள்ளார். (எ)



## இலங்கை கடற்படையினர் மீது கொலை வழக்கு: உயிரிழந்த மீனவர்களுக்கு நீதி கோரி இராமேஸ்வரம் மீனவர் உண்ணாவிரதம்

இராமேஸ்வரம்,ஜன.23

நடுக்கடலில் மீனவர்களின் படகை மூழ்கடித்த இலங்கைக் கடற்படையினர் மீது கொலை வழக்குப் பதிவு செய்ய வலியுறுத்தியும், மீனவர்களின் உடலை தமிழகம் எடுத்து உடற்கூறு ஆய்வு செய்யக் கோரியும், உயிரிழந்த மீனவர்களுக்கு உரிய நீதி கிடைக்க வேண்டியும் இராமேஸ்வரம் மீனவர்கள் நாளை 24 ஆம் திகதி முதல் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட உள்ளர் என மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

கடந்த 18 ஆம் திகதி புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினத்திலிருந்து இராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சி மடத்தைச் சேர்ந்த ஆரோக்கிய ஜேசு என்பவரது படகில் மேசியா, நாகராஜன், செந்தில்குமார், சாம் ஆகிய நான்கு மீனவர்களும் மீன்பிடி அனுமதிச் சீட்டு பெற்று மீன்பிடிக்கக்கடலுக்குச்சென்றனர்.

மீனவர்கள் நெடுந்தீவுக்கும் கச்சதீவுக்கும் இடையே மீன்பிடித்துக்கொண்டிருக்கும்போது அங்கு வந்த இலங்கைக்கடற்படையினர் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக வழக்குப் பதிவு செய்யப் போவதாக எச்சரித்துள்ளனர்.

இதனால்அச்சமடைந்த மீனவர்கள் அங்கிருந்து தப்பமுயன்ற போது இலங்கைக் கடற்படை ரோந்து கப்பல் மீது மோதியதில் படகு நடுக்கடலில் மூழ்கியது.

இதனால் படகில் இருந்த நால்வரும் நடுக்கடலில் மாயமாகினர். மாயமான மீனவர்கள் கடந்த இரண்டு நாள்களாக இலங்கைக் கடற்படையினர் தேடி வந்த நிலையில் நான்கு மீனவர்களின் உடல்கள் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் மீனவர்களின் உறவினர்கள் மற்றும் மீனவ சங்க தலைவர்கள் தங்கச்சி மடத்தில் அவசர ஆலோசனை கூட்டம் நடத்தி உயிரிழந்த நான்கு மீனவர்களின்உடல்கள்தமிழகம்கொண்டு வரப்பட்டு தமிழக மருத்துவர்களால் உடற்கூறு ஆய்வு செய்ய வேண்டும் எனவும், உயிரிழந்த மீனவர்களுக்கு உரிய நீதி கிடைக்க வேண்டும் எனவும், 1974 ஆம் ஆண்டு போடப்பட்ட கச்சதீவு ஒப்பந்தத்தை மீறிச் செயல்பட்டு வரும் இலங்கை அரசை கண்டித்தும் நாளை மறுதினம் 24 ஆம் திகதி முதல் கடலோர மாவட்ட மீனவர்கள் ஒன்றிணைந்து தங்கச்சி மடத்தில் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்த போவதாக முடிவு செய்துள்ளனர். (எ)

## இலங்கையில் மனிதஉரிமை மீறல்கள் மூவரடங்கிய ஆணைக்குழு நியமனம்

### ஜனாதிபதி கோட்டாபய நடவடிக்கை

கொழும்பு,ஜன.23

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய்ந்து, எதிர்காலத்தில் செயல்படும் விதம் தொடர்பில் பரிந்துரைகளை முன்வைக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் மூவரடங்கிய ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற நீதிபதி ஏ.எச். எம்.நவாஸ் தலைமையில் ஜனவரி மாதம் 20ஆம் திகதி முதல் அமுலுக்குவரும் வகையில் இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழுவில் ஓய்வு பெற்ற பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ மற்றும் ஓய்வு பெற்ற மாவட்ட செயலாளர் நிமால் அபேசிறி ஆகியோர் உறுப்பினர்களாகச் செயற்படுகின்றனர்.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அல்லது முன்னர் இடம்பெற்ற ஆணைக்குழு விசாரணை குறித்து விசாரணை செய்யவும், விசாரிக்ககவும் மற்றும் அறிக்கை இடவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் இந்த மூவரடங்கிய ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. (எ)



# பக்தாத்தில் இரட்டை தற்கொலை தாக்குதல்!

## *32 பேர் பலி: 100இற்கும் அதிகமானோர் காயம்!!*



**பக்தாத், ஜன. 23**

**ஈராக்கின் தலைநகர் பக்தாத்தில் மக்கள் அதிகம் கூடும் சந்தையில் இரு தற்கொலை தாக்குதல்கள் நடத்தப்பட்டுள் ளன. இதில், 32 பொதுமக்கள் பலியாகினர். நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயங்க ளுக்கு உள்ளாகினர். எனினும் இவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று என்று அமக் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.**

ஷியா முஸ்லிம்களை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது. தயரான் சதுக்கத்தில் துணிகள் விற்கும் பகுதியிலேயே தங்களை வியாபாரிகள் போலக் காட்டிக் கொண்ட தற்கொலைதாரிகள் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

உள்ளூர் நேரப்படி வியாழக்கிழமை காலை இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

தற்கொலைதாரிகளில் ஒருவர் சந்தை நேரத்தில், திடீரென உடல்நிலை பாதிக்கப்பட்டவர் போன்று கத்தியுள்ளார். இதைக் கேட்டு அவருக்கு உதவுவதற்காக மக்கள் அவரைச் சுற்றிக்கூடிய போது குண்டை வெடிக்க வைத்துள்ளார்.

இதில், சிக்கி பலர் உயிரிழந்தும், காயமடைந்த நிலையில், அவர்களை காப்பாற்ற நுழைந்தவர்களுடன் சேர்ந்து புகுந்த இரண்டாவது தற்கொலைதாரியும் குண்டுகளை வெடிக்கச் செய்துள்ளார் என்று தெரியவருகின்றது.

கடந்த மூன்று ஆண்டுகளாக பாக்தாத்தில் எந்தத் தாக்குதலும் நடத்தப்படாத நிலையில், இந்த இரட்டை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

ஈராக்கின் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் இந்தத் தாக்குதலுக்கு கண்டனம் வெளியிட்டுள்ளனர். அத்துடன் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் இறுக்கமாகப் பேணவும் உத்தரவு பிறப்பித்துள்ளனர். (ஐ)



# உலகிலேயே அழுக்கான மனிதர்! 67 வருடங்கள் குளிக்கவில்லை!!

தெஹ்ரான், ஜன. 23

உலகிலேயே அழுக்கான மனிதராக ஈரான் நாட்டைச் சேர்ந்த அமோவ் ஹாஜி அறியப்படுகிறார். கடந்த 67 ஆண்டுகளாக இவர் குளிக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

தெற்கு ஈரான் பகுதியில் உள்ள தேஜ்கா என்ற கிராமத்தை சேர்ந்தவர் அமோவ் ஹாஜி. இவருக்கு தண்ணீர் என்றாலே பயம். இதனால், கிட்டத்தட்ட 67 ஆண்டுகளாக தண்ணீரில் தன் உடலை நனைத்ததில்லை. குளித்தால் தான் நோய்வாய்ப்பட்டு விடுவோம் என்று இவர் நம்புகிறார்.

இதனால், தண்ணீர் இருக்கும் பக்கம்கூட அவர் திரும்பிப் பார்ப்பதில்லை. இதனால், உடல் முழுக்க புழுதி படிந்து அழுக்காகவே அமோவ் ஹாஜி காட்சியளிக்கிறார். தன் இளமைக் காலத்தில் நடந்த சில சோக சம்பவங்களால் , அமோவ் ஹாஜி தனியாகவே வசிக்கிறார்.

சாம்பல் மற்றும் அழுக்குகளால் நிறைந்த அவரை பார்த்தால் ஒரு சிற்பம் போல் தோற்றமளிக்கிறார். அமோவ் ஹாஜியின் உணவு பழக்கமும் வித்தியாசமாகவே இருக்கிறது. இறந்த விலங்குகளின் அழுகிய உடற் பாகங்களை சாப்பிடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார்.

முள்ளம்பன்றிக் கறியை விரும்பி உண்ணும் அவர் தினமும் 5 லீற்றர் தண்ணீர் குடிக்கிறார். தற்போது 87 வயதாகும் அமோவ் ஹாஜிக்கு புகைக்கும் பழக்கமும் உண்டு.

அடிக்கடி, தன் உடல் எப்படியிருக்கிறது கார் கண்ணாடிகளில் பார்த்துக் கொள்கிறார். உடல் எவ்வளவுக்கு எவ்வளவு அழுக்காக இருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு நோய் வராது என்பது அவரின் நம்பிக்கையாம். (ஐ)

# பல்கலைக்கழக மாணவருக்கு ஒரு யூரோவுக்கு மதிய உணவு!

பாரிஸ், ஜன. 23

பிரான்ஸில் பல்கலைக்கழகங்களின் உணவகங்களில் ஒரு யூரோவுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும் என்று ஜனாதிபதி இமானுவல் மக்ரோன் நேற்று முன்தினம் அறிவித்திருக்கிறார்.

தேவைப்படும் மாணவர்கள் நாள் ஒன்றுக்கு இரண்டு தடவை உணவை ஒரு யூரோ கட்டணத்துக்கு பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

பெரும் தொற்றுக்கால நெருக்கடிகளால் வருமானம் இழந்த நிலையில் கல்வியைத் தொடரும் பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரதும் நலன் கருதி இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

புலமைப்பரிசில் உதவி பெறாத மாணவர்கள் மற்றும் வெளிநாட்டு மாணவர்கள் உட்பட அனைவருக்கும் இத்திட்டம் பயன் அளிக்கும் என்றும் அவர் கூறினார்.

பாரிஸின் தென்மேற்குப் புறநகரான சக்லேக்கு சென்ற ஜனாதிபதி மக்ரோன் அங்கு பிரபல சக்லே பல்கலைக்கழக மாணவர்களுடன் கலந்துரையாடினார். இதன்பின்னரே, இந்த உத்தரவை அவர் பிறப்பித்துள்ளார். (ஐ)



# அருணாச்சல பிரதேசம் எமது: யாரும் எதிர்க்க முடியாது!

## *சீனா மீண்டும் அறிவிப்பு*

பீஜிங், ஜன. 23

“அருணாச்சல பிரதேசம், எங்களுடைய எல்லைக்குட்பட்டது. அங்கு கட்டுமான பணிகள் மேற்கொள்வதை யாரும் எதிர்க்க முடியாது”, என்று சீனா மீண்டும் அறிவித்துள்ளது.

அயல் நாடுகளான சீனாவும் இந்தியாவும் அடிக்கடி எல்லை தொடர்பில் முரண்படுகின்றன - மோதலிலும் ஈடுபடுகின்றன. அண்மையில், இரு நாடுகளின் எல்லையான கிழக்கு லடாக்கில் இரு படையினரும் மோதினர். இதில் இரு தரப்பிலுமாக சுமார் 60 வரையான படையினர் கொல்லப்பட்டனர். இந்த விவகாரம் குறித்து இரு நாடுகளும் சுமார் 8 மாத காலமாக பேச்சு நடத்துகின்ற போதிலும் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இந்நிலையில், சீனாவின் வெளிவிவகார பிரதேசத் தொடர்பாளர் ஹூவா சுன்யிங் கூறியுள்ளதாவது:

தெற்கு திபெத் பிராந்தியம் குறித்த சீனாவின் நிலைப்பாடு, எப்போதும் தெளிவாக உள்ளது. அருணாச்சல பிரதேசத்தை நாங்கள் அங்கீகரிக்கவில்லை. அது திபெத்தின் ஒரு பகுதிதான். எங்கள் சொந்த எல்லைக்குட்பட்ட பகுதியில், நாங்கள் கட்டுமான பணிகள் மேற்கொள்வது இயல்பான ஒன்று. அதற்கு யாரும் எதிர்ப்பு தெரிவிக்க முடியாது”, என்று கூறியுள்ளார்.

இந்த விடயம் இந்தியத் தரப்பை கோபமடையச் செய்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## குழந்தை ஈன்ற தாயை பாதுகாக்க தவறினர் மருத்துவ பணியாளர்கள்

# பதவி விலகினார் மொங்கோலிய பிரதமர்



உலன்போர்டர், ஜன. 23

கொரோனா வைரஸ் தாக்கத்துக்குள்ளான தாயும் சேயும் மங்கோலிய அரசு மருத்துவமனையில் தவறாக நடத்தப்பட்டனர். இதையடுத்து கிளர்ந்தெழுந்த மக்கள் பெரும் போராட்டத்தை நடத்தினர். இதையடுத்து, மொங்கோலிய பிரதமர் பதவி விலகினார்.

சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே உள்ள சிறிய நாடு மொங்கோலியா. நிலக்கரி ஏற்றுமதியிலேயே இதன் பொருளாதாரம் தங்கியுள்ளது. பௌத்தர்கள் அதிகம் வாழும் இந்த நாட்டில் மொங்கோலிய மக்கள் கட்சி ஆட்சியில் இருக்கிறது.

கொரோனா தொற்றால், இந்த நாட்டின் பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. எனினும் நாட்டில் தொற்றின் தாக்கம் குறைவாகவே உள்ளது.

இந்நிலையில், அண்மையில் குழந்தையை பெற்றெடுத்த தாய் ஒருவருக்கு கொரோனா பாதுகாப்பு நடவடிக்கை எதுவுமின்றி சாதாரண உடையுடன் அரசு மருத்துவமனை ஒன்றிலிருந்து மற்றொரு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

தாய்மார்களை அதிகம் மதிக்கும் பண்பாட்டைக் கொண்ட இந்த நாட்டில், குழந்தை பெற்றெடுத்த தாயை கவனக்குறைவாக பராமரித்தில் அவர்களுக்கு தொற்று ஏற்பட்டது.

இவர்களின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து தலைநகர் உலன்போரில் மக்கள் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதில் பெருமளவான இளைஞர்கள் பங்கேற்றனர்.

தவறுக்குப் பொறுப்பேற்ற பிரதமர் உக்னாஜின் குரேல்சுக் பதவியிலிருந்து விலகுகிறார் என்று அறிவித்துள்ளார். (ஐ)

# அஞ்சலோ மத்தியூஸ் சதம்: இலங்கை அணி அபாரம்




கொழும்பு, ஜன. 23

அஞ்சலோ மத்தியூஸின் அதிரடியான சதத்தின் உதவியால் இங்கிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது போட்டியின் முதல்நாள் ஆட் டம் முடிவில் 4 விக்கெட் இழப் புக்கு 229 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையில் உள்ளது.

இலங்கை வந்துள்ள இங்கி லாந்து அணி இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. முத லாவது போட்டியில் 7 விக் கெட்களால் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றிருந்தது. இந்நிலையில் இரு அணிகளுக் கும் இடையிலான இரண்டாவ தும் இறுதியுமான டெஸ்ட் போட்டி நேற்று தொடங்கி யது.

காலியில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தா டத் தீர்மானித்தது. இந்தப் போட்டிக்கும் தினேஷ் சந்தி மால் தலைமை தாங்கினார்.

லஹிரு திரிமன்னே, குஷல் பெரேரா இணை தொடக்கம் கொடுத்தது. 14 பந்துகளை எதிர்கொண்ட குஷல் பெரேரா 6 ஓட்டங்களுடன் அண்டர்சன் னின் பந்தில் ரூட்டிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ஓஸத பெரேரா ஓட்டம் எதனையும் பெறாமலே ஆட்டமிழந்தார். நிதானமாக தனது ஆட்டத்தை வெளிப்படுத்திய திரிமன்னே யுடன் அனுபவ வீரரான அஞ் சலோ மத்தியூஸ் இணைந்தார். இருவரும் சிறப்பான ஆட் டத்தை வெளிப்படுத்திய நிலை யில், அண்டர்சனின் பந்தில் விக்கெட் காப்பாளர் பட்லரி டம் பிடிகொடுத்து ஆட்ட மிழந்தார் திரிமன்னே. அவர் 95 பந்துகளில் 4 பௌண்ட்ரிகளு டன் 43 ஓட்டங்களைப் பெற்றி ருந்தார்.

மத்தியூஸூடன் இணைந்த அணித் தலைவர் தினேஷ் சந்தி மால், அபாரமாக விளையாடி னார். இருவரும் இலங்கை அணியை வலுவான நிலை நோக்கி கொண்டு சென்றனர். 89 பந்துகளில் 7 பௌண்ட்ரி களுடன் அரைச்சதத்தைக் கடந்தார் மத்தியூஸ். அடுத்து 110 பந்துகளை சந்தித்த சந்தி மாலும் தனது 20ஆவது டெஸ்ட் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இந்நிலையில் சந்திமால் 4 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 52 ஓட்டங்களை எடுத்த நிலையில் வூட்டின் பந்தில் எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்ட மிழந்தார். அடுத்து நிரோஷன் டிக்வெல்ல களமிறங்கினார்.

இதைத்தொடர்ந்து 207 பந்துகளில் தனது 11 ஆவது சதத்தைப் பூர்த்தி செய்தார் மத்தியூஸ்.

முதல்நாளான நேற்று, ஆட் டம் முடிவடையும்போது இலங்கை அணி 4 விக்கெட்கள் இழப்புக்கு 229 ஓட்டங்களைப் பெற்றது.

மத்தியூஸ் 107 ஓட்டங்களு டனும், நிரோஷன் டிக்வெல்ல 19 ஓட்டங்களுடனும் ஆட்ட மிழக்காமல் உள்ளனர்.

இங்கிலாந்து அணியின் பந்து வீச்சில் ஜேம்ஸ் அண்டர் சன் 3 விக்கெட்களையும், மார்க் வூட் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றியுள்ளனர்.

இன்று போட்டியின் இரண் டாம்நாளாகும். (ஐ)



## இந்தியாவுடனான டெஸ்ட்: இங்கிலாந்து அணி அறிவிப்பு

இங்கிலாந்து, ஜன. 23

பெப்ரவரி மாதம் முதல் இந்தியாவில் டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ள இங்கிலாந்து அணியின் முதல் இரு போட்டிகளுக்கான வீரர்கள் அறிவிக்கப் பட்டுள்ளனர்.

இந்தியாவில் பெப்ரவரி முதல் பயணம் செய்யும் இங்கிலாந்து அணி 4 டெஸ்ட் போட்டிகள், 5 இருபது - 20 போட்டிகள், 3 ஒருநாள் போட்டிகளில் விளையாட வுள்ளது. முதல் இரு டெஸ்ட் போட்டிகள் சென்னை யில் நடக்கின்றன. பெப்ரவரி 5ஆம் திகதி முதல் டெஸ்ட் போட்டி சென்னை எம்.ஏ.சி. மைதா னத்தில் தொடங்குகிறது.

இதில், இந்திய அணிக்கு எதிரான முதல் இரு டெஸ்ட் போட்டிகளுக்கான இங்கிலாந்து அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. தற்போது, இலங்கை யில் டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணி விளையாடி வருகிறது. இந்த தொடருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ள வேகப்பந்து வீச்சாளர் ஜோப்ரா ஆர்ச்சர், சகலதுறை வீர ரும் பென் ஸ்ரோக்ஸ் இருவரும் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சேர்க்கப்பட்டுள்ளனர்.இலங்கை தொடரில் விளையாடிவரும் ஜொனதன் பெயர்ஸ்ரோ, சாம் கரன், மார்க் வூட் ஆகியோர் தெரிவாகவில்லை.

அணி விவரம்:

ஜோ ரூட், ஜோப்ரா ஆர்ச்சர், மொயின் அலி, ஜேம்ஸ் அண்டர்ஸன், ரொம் பெஸ், ஸ்ருவர்ட் பிரொட், ரோரி பர்ன்ஸ், ஜோஸ் பட்லர், ஜாக் கிராலி, பென் பொக்ஸ், டொன் லோரன்ஸ், ஜாக் லீச், பென் ஸ்ரோக்ஸ், ஒலே ஸ்டோன், கிறிஸ் வோக்ஸ்.




## ஐ.பி.எல். 2021 ஏலம்:
# அணிகள் தக்கவைத்த விடுவித்த வீரர்கள் யார்?

புதுடில்லி, ஜன. 23

2021ஆம் ஆண்டில் நடக்க இருக்கும் 14ஆவது ஐபிஎல் இருபது - 20 போட்டிக்கான சிறிய ஏலத்துக்கு முன்பாக, 8 அணிகளும் தாங்கள் தக்கவைத் துள்ள வீரர்கள், விடுவிக்கப் பட்ட வீரர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளன.

இதன்படி 85 கோடி இந்திய ரூபாவுக்கு மேற்படாமல் அனைத்து அணிகளும் வீரர் களை தெரிவு செய்ய முடியும். இதனால், அனைத்து அணி களும் தங்களிடம் இருக்கும் விலை உயர்ந்த வீரர்களை விடு வித்து, தொகையை அதிகப் படுத்தி ஏலத்தில் புதிய வீரர் களை எடுக்க ஆயத்தமாகி வரு கின்றன.

**பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்**

பெங்களூர் றோயல் சலஞ் சர்ஸ் அணியிலிருந்து 10 வீரர்கள் விடுவிக்கப்பட்டுள்ள னர். குர்கீரத் சிங் மான், மொயின் அலி, பர்தீப் படேல், பவன் நெகி, ஷிவம் துபே, உமேஷ் யாதவ், ஆரோன் பிஞ்ச், கிறிஸ் மோரிஸ், டேல் ஸ்டெயின், இசுறு உதான

தக்கவைக்கப்பட்ட வீரர்கள்:

விராட் கோலி, டி வில்லி யர்ஸ், தேவ்தத் படிக்கல், யஜூவேந்திர சாஹல், முகமது சிராஜ், கானே ரிச்சார்ட்ஸன், வாஷிங்டன் சுந்தர், பவன் தேஷ் பாண்டே, ஜோஷ்வா பிலிப், ஷ ான்பாஸ் நதீம், நவ்தீப் ஷைனி, அடம் ஷம்பா

மீதித் தொகை ரூ.35.7 கோடி

**சென்னை சுப்பர் கிங்ஸ்**

தக்கவைக்கப்பட்ட வீரர்கள்:

எம்.எஸ்.டோனி, நாராயண் ஜெகதீசன், ருதுராஜ் கெய்க் வாட், ரவீந்திர ஜடேஜா, ஜோஷ் ஹசல்வூட், கரன் சர்மா, அம்பதி ராயுடு, சுரேஷ் ரெய்னா, இம்ரான் தஹிர், டு பிளசிஸ், ஷர்துல் தாகூர், மிட் ஷெல் சான்ட்னர், டுவைன் பிராவோ, லுங்கி இங்கிடி, சாம் கரன், சாய் கிஷோர்.

விடுவிக்கப்பட்ட வீரர்கள்:

ஷேன் வற்சன்(ஓய்வு), முரளி விஜய், கேதார் ஜாதவ், ஹர் பஜன் சிங், பியூஷ் சாவ்லா, மோனு சிங்

இருப்பு தொகை: ரூ.22.90 கோடி

**ராஜஸ்தான் றோயல்ஸ்**

தக்கவைத்துள்ள வீரர்கள்:

சஞ்சு சாம்ஸன், பென் ஸ்ரோக்ஸ், ஜோப்ரா ஆர்ச்சர், ஜோஸ் பட்லர், ரியான் பராக், ஸ்ரேயாஸ் கோபால், ராகுல் திவேஷியா, மகிபால் லோம்ரார், கார்த்திக் தியாகி, அண்ட்ரூ ரை, ஜெயதேவ் உனாகட், மயங்க் மார்கண்டே, யாஹஸ்வி ஜெய்ஸ்வால், அனுஜ் ராவத், டேவிட் மில்லர், மனன் வோரா, ரொபின் உத்தப்பா.

விடுவிக்கப்பட்ட வீரர்கள்

ஸ்ரீவ் ஸ்மித், அங்கித் ராஜ் புத், ஒஷனே தாமஸ், ஆகாஷ் சிங், வருண் ஆரோன், டொம் கரன், அனிருத் ஜோஷி, சசாங் சிங்.

இருப்புத் தொகை: ரூ.34.85 கோடி

**டில்லி கப்பிட்டல்ஸ்**

தக்கவைக்கப்பட்ட வீரர்கள்:

ஸ்ரேயாஸ் ஐயர், ஷிகர் தவான், ரிஷப் பந்த், இசாந்த் சர்மா, அஜின்யே ரஹானே, ரவிச்சந்திர அஸ்வின், பிரித்வி ஷா, லலித் யாதவ், ஆவேஷ் கான், அக்ஸர் படேல், அமித் மிஸ்ரா, காகிசோ ரபாட், மார்கஸ் ஸ்ரொய்னிஸ், கிறிஸ் வோக்ஸ், ஷிம்ரன் ஹெட்மயர், பிரவின் துபே, ஹர்ஸல் படேல், டேனியல் சாம்ஸ், ஆன்ரிச் நார்ஜே.

விடுவிக்கப்பட்ட வீரர்கள்

மோகித் சர்மா, கீமோ பால், துஷார் தேஷ்பாண்டே, சந்தீப் லாமிசானே, அலெக்ஸ் காரே, ஜேஸன் ராய்

இருப்பு தொகை: ரூ.12.80 கோடி

**ஹைதராபாத் சன் ரைசர்ஸ்:**

தக்கவைக்கப்பட்ட வீரர்கள்:

கேன் வில்லியம்ஸன், டேவிட் வோர்ணர், மணிஷ் பாண்டே, விராட் சிங், பிரியம் கார்க், அப்துல் சமது, புவ னேஷ்வர் குமார், கலீல் அக மது, சந்தீப் சர்மா, சித்தார்த் கவுல், டி நடராஜன், அபிஷேக் சர்மா, ஷான்பாஸ் நதீம், மிட் ஷெல் மார்ஷ், விஜய் சங்கர், முகமது நபி, ரசித் கான், ஜானி பேர்ஸ்டோ, விருதிமான் சஹா, ஸ்ரீவத்ஸ் கோஸாமி, பாசில் தம்பி, ஜேஸன் ஹோல்டர்

விடுவிக்கப்பட்ட வீரர்கள்

பில்லி ஸ்டேன்லேக், பேபியன் ஆலன், சஞ்சய் யாதவ், சந்தீப், பிரிதிவி ராஜ்

இருப்புத் தொகை: ரூ.10.75 கோடி

**கிங்ஸ்லெவன் பஞ்சாப்**

தக்கவைக்கப்பட்ட வீரர்கள்

கே.எல்.ராகுல், கிறிஸ் கெயில், மயங்க் அகர்வால், சர்பிராஸ் அகமது, மன்தீப் சிங், இஷான் போரல், ரவி பிஸ்னோய், முகமது ஷமி, அர்ஸ்தீப் சிங், முருகன் அஸ் வின், ஹர்பிரித் பரார், தர்ஷன் நல்காண்டே, கிறிஸ் ஜோர்டன், தீபக் ஹூடா, நிகோலஸ் பூரன், பிரப்சிம்ரன் சிங்

விடுவிக்கப்பட்ட வீரர்கள்

கிளென் மக்ஸ்வெல், ஷெல் டன் காட்ரெல், கே.கௌதம், முஜிப் உர் ரஹ்மான், ஜிம்மி நீஷம், ஹர்தஸ் வில்ஜியோன், கருண் நாயர், ஜெகதீஸா சுசித், திஜேந்தர் சிங்

இருப்பு தொகை: 53.20 கோடி

**மும்பை இந்தியன்ஸ்**

தக்கவைக்கப்பட்ட வீரர்கள்

ரோஹித் சர்மா, சூர்யகுமார் யாதவ், அமோல்பிரீத் சிங், கிறிஸ் லின், சௌரவ் திவாரி, தவால் குல்கர்னி, ஜஸ்பிரித் பும்ரா, ராகுல் சாஹர், டிரன்ட் போல்ட், மோஸின் கான், ஹர்திக் பாண்ட்யா, ஜெயந்த் யாதவ், கெய்ரன் பொலார்ட், குர்னால் பாண்ட்யா, அன்குல் ராய், இசான் கிஷந், குயின்டன் டி காக், ஆதித்ய தாரே

விடுவிக்கப்பட்ட வீரர்கள்

லசித் மலிங்க, நதன் கூல்டர் நீல், ஜேம்ஸ் பற்றின்ஸன், ஷெர்பானேரூதர்போர்ட், மிட்ஷெல் மெக்லநெகன், திக்விஜய் தேஷ்முக், பிரின்ஸ் பல்வந்த் ராய்

இருப்பு தொகை: ரூ.15.35 கோடி

**கொல்கத்தா நைற் ரைடர்ஸ்**

தக்கவைக்கப்பட்ட வீரர்கள்:

அன்ட்ரூ ரஸல், தினேஷ் கார்த்திக், டிம் ஷீபெர்ட், கமலேஷ் நாகர்கோட்டி, குல்தீப் யாதவ், லாக்கி பெர்குஷன், நிதிஷ் ராணா, பிரசித் கிருஷ்ணா, ரிங்கு சிங், சந்தீப் வாரியர், சுப்மான் கில், சுனில் நரேன், பட் கம்மின்ஸ், இயான் மோர்கன், வருண் சக்ரவர்த்தி, ராகுல் திரிபாதி

விடுவிக்கப்பட்ட வீரர்கள்:

நிகில் நாயக், சித்தேஷ் லாட், எம். சித்தார்த், டாம் பான்டன், கிறிஸ் கிரீன், ஹாரி குர்னே

இருப்பு தொகை: ரூ. 10.85 கோடி

(ஐ)

## யாழில் நள்ளிரவில் பயங்கரம்

# கார், கடை, மின் கம்பம் மீது இ.போ.ச. பஸ் மோதி விபத்து

### இருவர் படுகாயம்; பொலிஸார் விசாரணை

**யாழ்ப்பாணம்,ஜன.23**

**கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த இலங்கைப் போக்குவரத்து சபை பஸ் பயணிகளை இறக்கிவிட்டு கோண்டாவில் சாலைக்கு செல்லும்போது - ஆனைப்பந்தியூடாக இலுப்பையடிச் சந்தியை (பலாலி வீதி) திடீரென கடந்த கார் மீது மோதியதில் காரில் பயணித்தவர்களில் ஒருவர் காயமடைந்ததுடன் கார் கடுமையாகச் சேதமடைந்தது. இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன் தினம் இரவு 11.15 மணியளவில் இடம்பெற்றது.**





பஸ் வேகமாக கார் மீது மோதியதுடன் தொலைபேசி கம்பம், மின் விளக்கு கம்பம், அருகில் உள்ள பஸ் தரிப்பு நிலையம், ஆடைகள் விற்பனை நிலையத்தின் முகப்பு பகுதியையும் உடைத்து சேதப்படுத்தியது. இந்நிலையில் ஆடைகள் விற்பனை நிலையத்துக்குள் உறங்கிக் கொண்டிருந்த ஒருவர் தலையில் படுகாயங்களுடன்யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆடைகள் விற்பனை நிலையத்துக்கு அருகில் உள்ள வாகன சேவிர்ஸ் நிலையத்தின் ஒருபகுதி சேதமடைந்ததுடன் அங்கு நின்ற கார் ஒன்றும் சிறு சேதங்களுக்கு உள்ளாகியுள்ளது. இதேவேளை பஸ்ஸின் முகப்புப் பகுதி கடுமையாகச் சேதடைந்துள்ளதுடன் ஆசனங்களுடன் உடைந்துள்ளன.

பஸ் மோதிய காரில் பயணித்தவர்கள் மட்டக்களப்பைச் சேர்ந்த தனியார் நிறுவனத்தில் பணிபுரிபவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்துக்கு அலுவலக விடயமாக வந்துள்ளனர். சம்பவத்தில் காயமடைந்தவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். (எ)

# உரிய பராமரிப்பற்ற காணிகள் சபை உடைமையாக்கப்படும்

### நல்லூர் தவிசாளர் அறிவிப்பு

*யாழ்ப்பாணம்,ஜன.23*

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் உரிய பராமரிப்பற்ற காணிகள் சபை உடைமையாக்கப்படும் என தவிசாளர் ப.மயூரன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் பல இடங்களில் உள்ள காணிகள் உரிமையாளர்களால் பராமரிக்கப்படாது புற்கள் வளர்ந்து காடுகளாக காட்சியளிக்கின்றன. இந்தக் காணிகளை பிரதேச சபை உறுப்பினர்களுடன் நேற்றுக்காலை சென்று பார்வையிட்ட பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தற்போது டெங்கு நுளம்பு பரவும் அபாய நிலை காணப்படுகின்றது. அத்தோடு நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியை தூய்மையாகவும் அழகாகவும் பேணுவதற்கு நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் பராமரிப்பின்றி கைவிடப்பட்ட நிலையில் உள்ள காணி உரிமையாளர்கள் தமது காணிகளை உடனடியாக துப்புரவு செய்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தவறும் பட்சத்தில் பராமரிப்பற்ற காணிகள் அனைத்தும் நல்லூர் பிரதேச சபையின் உடைமையாக்கப்படும்- என்றார். (எ)

# சுத்திகரிப்பு பணியாளர்கள் 15 பேருக்கு கொரோனா

*கொழும்பு,ஜன.23*

கொழும்பு பம்பலப்பிட்டி மஜெஸ்ரிக் சிற்றி பல்பொருள் அங்காடிக்கு முன்பு நேற்று முன் தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் கொழும்பு பிராந்திய சுத்திகரிப்புப் பணிகளில் ஈடுபடும் 15 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது என வைத்திய நிபுணர் ஸ்ரீபிரதாபன் தெரிவித்தார்.

வெள்ளவத்தை பிரதான சந்தைத் தொகுதியில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளங் காணப்பட்டதைத் தொடர்ந்து வெள்ளவத்தை, பம்பலப்பிட்டியின் பல்வேறு பகுதிகளிலும் எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் நேற்று பம்பலப்பிட்டி மஜெஸ்ரிக் சிற்றி பல்பொருள் அங்காடி, யுனிட்டி பிளாஸா மற்றும் மஜெஸ்ரிக் சிற்றி கட்டடத்தொகுதி பகுதியிலுள்ள வாகனத்தரிப்பிடம் உள்ளிட்ட பகுதிகளில் பணியாற்றுவோருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்த முடிவுகளின் படி வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, நாரஹென்பிட்டி உள்ளிட்ட கொழும்பின் சில பகுதிகளில் சுத்திகரிப்புப் பணிகளில் ஈடுபடும் பணியாளர்கள் 15 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியிருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.- என்றார். (எ)

# யாழில் விவசாய கடன் திட்டங்கள் உரியவர்களை சென்றடையவில்லை

### ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

*யாழ்ப்பாணம்,ஜன.23*

வங்கிகளால் அறிமுகப்படுத்தப்பட்ட கடன் திட்டங்கள் விவசாயிகளை சென்றடைவதில்லை எனவும் இந்த விடயம் தொடர்பில் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் யாழ். மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வலியுறுத்தப்பட்டது.

யாழ். மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தின்போது யாழ். மாவட்டத்தின் விவசாயத் துறை சம்பந்தமான பல்வேறு பட்ட விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன.

அண்மையில் பெய்த அடைமழையால் நெல் அறுவடைக்கு தாமதம் ஏற்பட்டுள்ளமை, மற்றும் நெல்வயல்கள் அழிவடைந்ததன் காரணமாக நெல் கொள்வனவு விலையை தேசிய மட்டத்தில் உள்ளதைப் போன்று அல்லது வடக்குக்கு ஏற்றால் போன்று மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் விவசாயிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டது.



மேலும் வங்கிகளால் அறிமுகப்படுத்தப்பட்ட கடன் திட்டங்கள் விவசாயிகளை சென்றடைவதில்லை எனவும் இந்த விடயம் தொடர்பில் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இந்தக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டதற்கிணங்க இந்த விடயங்கள் தொடர்பில் விவசாய அமைப்புக்கள் மட்டத்தில் பிரதேச செயலாளர்கள் மூலம் வங்கிக்கடன் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தல் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேலும் விதை உற்பத்தி நிலையத்துக்கென யாழ். மாவட்டத்தில் தகுந்த இடம் ஒன்றைப் பெற்றுத் தருமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது. யாழ். மாவட்டத்திலிருந்து கிளிநொச்சி விதை உற்பத்தி நிலையத்துக்குச் சென்று விவசாயிகள் தமது விதை பொருள்களைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலை காணப்படுவதனால் மாவட்டத்தில் ஒரு இடத்தில் விதை உற்பத்தி நிலையத்தை அமைத்தால் விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் பிறிதொரு இடத்தை பெற்றுக் கொடுப்பதாக தீர்மானிக்கப்பட்டது.

மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர், கமநல சேவைகள் பணிப்பாளர், பிரதேச செயலர்கள் விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர்கள் விவசாயத்துறை சார் திணைக்களத் தலைவர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (எ)




# மயிலத்தமடு பண்ணையாளர்களுக்கு பாதுகாப்பு வழங்க நீதிமன்று பணிப்பு

## மேய்ச்சல் தரையை பயன்படுத்தவும் தடையில்லை

மட்டக்களப்பு, ஜன. 23

**மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல்தரை வழக்கு முடியும் வரையில் பண்ணையாளர்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறும், மேய்ச்சல் தரையை பாவிப்பதை தடை செய்ய வேண்டாம் எனவும் மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி பணிப்புரை விடுத்துள்ளதாக சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ். இரத்தினவேல் தெரிவித்தார்.**

மயிலத்தமடு, மாதவனை பகுதியில் மேய்ச்சல் தரைப் பகுதியில் அத்துமீறிய அபகரிப்பு தொடர்பான வழக்கு நேற்று மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டது.

கடந்த மாதம் 18ஆம் திகதி பண்ணையாளர்கள் சார்பில் மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல்தரை அபகரிப்பு தொடர்பான வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. நேற்று மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் நீதிபதி எம்.என். அப்துல்லா தலைமையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது பிரதிவாதிகளும் மேய்ச்சல் தரையில் அத்துமீறியதாக குற்றஞ்சாட்டப்பட்ட ஒரு வரும் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.

இதன்போது மேய்ச்சல் தரையில் பண்ணையாளர் எதிர் நோக்கும் பிரச்னைகள் குறித்து நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதைத் தொடர்ந்து குறிப்பிட்ட அதிகாரிகள் மேய்ச்சல் தரை பண்ணையாளர்களுக்கு பாதுகாப்பு வழங்கவேண்டும், பண்ணையாளர்கள் மேய்ச்சல் தரையை பாவிப்பதை தடைசெய்யக் கூடாது என்று உத்தரவிட்டார். இதனை நடைமுறைப்படுத்துவதாக அரச சட்டத்தரணி ஏற்றுக்கொண்டதுடன் அது தொடர்பில் உரிய அதிகாரிகளை அறிவுறுத்துவதாகவும் நீதிமன்றுக்கு வாக்குறுதியளித்தார்.

தற்போது மேய்ச்சல் தரை அபகரிப்பட்டதாக தெரிவிக்கப்படும் பகுதியை தவிர அப்பகுதியில் எந்த செயல்பாடுகளையும் முன்னெடுக்ககூடாது என்பதற்கும் அரச சட்டத்தரணி இணக்கம் தெரிவித்தார். வழக்கின் இறுதி தீர்ப்பு வழங்கப்படும் வரையில் தற்போது பிடிக்கப்பட்டுள்ள காணியை அவ்வாறே பேணுமாறும் வேறு எந்த செயற்பாடுகளையும் முன்னெடுக்ககூடாது என பணிக்கப்பட்டுள்ளதாகவும் சட்டத்தரணி இரத்தினவேல் தெரிவித்தார்.

இது தொடர்பான வழக்கு எதிர்வரும் மார்ச் மாதம் ஐந்தாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஐ)

## 21 நாட்களில் மட்டும் 12,615 தொற்றாளர்!

கொழும்பு, ஜன. 23

இலங்கையில் கடந்த 21 நாட்களில் மாத்திரம் 12 ஆயிரத்து 615 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

இதன்படி கொழும்பு மாவட்டத்தில் மூவாயிரத்து 543 பேருக்கும், கம்பஹா மாவட்டத்தில் 2 ஆயிரத்து 440 பேருக்கும், கண்டி மாவட்டத்தில் 960 பேருக்கும் வைரஸ் பரவியுள்ளது.

அத்துடன் நுவரெலியா மாவட்டத்தில் 114 பேருக்கும், பதுளையில் 22 பேருக்கும் வைரஸ் தொற்றியுள்ளது.

இதேவேளை, கடந்த நவம்பரில் 17 ஆயிரத்து 472 பேருக்கும், டிசம்பரில் 18 ஆயிரத்து 838 பேருக்கும் வைரஸ் தொற்றியுள்ளது.

## 104 உக்ரேனியர்கள் நேற்றும் வந்தனர்

கொழும்பு, ஜன. 23

உலகளாவிய ரீதியிலும், நாட்டிலும் கொரோனா தொற்று அதிகரித்து வருகின்றது. இந்த நிலையில் மற்றுமொரு உக்ரைன் சுற்றுலா பயணிகள் குழு இலங்கை வந்துள்ளது.

நேற்றையதினம் 104 உக்ரைன் சுற்றுலா பயணிகள் விமானம் மூலம் நாட்டை வந்தடைந்தனர்.

மத்தள விமான நிலையத்தை வந்தடைந்த இவர்கள், பி.சி.ஆர். பரிசோதனைகளின் பின்னர் ஹோட்டல்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்பட்டது. (ஐ)

## பசறை பாடசாலையில் 6 மாணவருக்கு தொற்று

கொழும்பு, ஜன. 23

பதுளை- பசறை தேசிய பாடசாலையில் 6 மாணவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

அந்தப் பாடசாலையில் கல்வி பயிலும் 4 மாணவர்கள் மற்றும் 2 மாணவிகளுக்கே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

அந்த மாணவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் மற்றும் அவர்கள் சென்று வந்த பகுதிகள் இனங்காணப்பட்டு அப்பகுதிகளிலும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.




காலை
5.15 மணி : தரம் 06 - கணிதம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - விஞ்ஞானம்
7.30 மணி : தரம் 09 - தமிழ்
8.15 மணி : தரம் 10 - விஞ்ஞானம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) ஊடகம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப் பிரிவு) உயிரியல்

பகல்
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) மறு ஒளிபரப்பு
2.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
3.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
4.00 மணி : தரம் 5 சுற்றாடல்
5.00 மணி : தரம் 5 கணிதம்
6.00 மணி : தரம் 6-9 ஆங்கிலம்
7.00 மணி : பொது சிங்களம்
7.30 மணி : உயர்தரம் கணிதம் விஞ்ஞானப்பிரிவு

## ட்ரம்பின் வெளியேற்றம் இலங்கைக்கு ஒரு பாடம்

### மனோ கணேசன் எம்.பி.

கொழும்பு, ஜன. 23

“அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வெளியேற்றம் இலங்கைக்கு ஒரு பாடம். நிறைவேற்று அதிகாரம், பாராளுமன்றம், நீதித்துறை, ஊடகத்துறை ஆகியவை ஒன்றையொன்று, திருத்தி, கட்டப்பாட்டுக்குள் கொண்டு வருமே தவிர, இலங்கையை போல் கூட்டுச் சேர்ந்து கும்மாளம் அடிக்காது என்று அமெரிக்கா நிரூபித்து விட்டது.”

- இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணி - தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

“அமெரிக்க ஜனநாயக தேச அமைப்பின் ஏனைய தூண்கள், ”ஆம் ஐயா” (யெஸ் சேர்) என்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதியிடம் சரணடையவில்லை. நீதித்துறையும், பாராளுமன்றமும், ஊடகத்துறையும் ஜனாதிபதி ட்ரம்பை வெளுத்து வாங்கி வெளியேற்றி உள்ளன. இன்று “ஜனாதிபதி சேர்“ தோற்றுபோய் அவமானப்பட்டு வெளியேறியுள்ளார். அமெரிக்காவின் ஜனநாயக அமைப்பு வென்றுள்ளது.

அமெரிக்காவின் தேர்தலை அடுத்த ஆட்சி மாற்றக் குளறுபடிகளைப் பார்த்து, இலங்கையின் பல பேரினவாத “அறிவாளிகள்“ அமெரிக்காவை எள்ளி நகையாடத் தொடங்கினர். அமெரிக்காவை விடத் தங்களை, மிகப்பெரும் ஜனநாயகவாதிகளாகக் காட்ட முற்பட்டனர். உலகுக்கு அறிவுரை கூற அமெரிக்கா தகுதியற்றது எனக் கூறி தங்களது இனவாத அட்டூழியங்களுக்கு நியாயப்பாடுகளைத் தேட முற்பட்டனர்.

இன்று இவர்களுக்கு, நெற்றியில் செருப்பால் அடித்ததைப் போல் அமெரிக்க ஜனநாயக அமைப்பு நிமிர்ந்து நிற்கின்றது. நிறைவேற்று அதிகாரம், பாராளுமன்றம், நீதித்துறை, ஊடகத்துறை ஆகியவை ஒன்றை ஒன்று, திருத்தி, கட்டப்பாட்டுக்குள் கொண்டுவருமே தவிர, இலங்கையை போல் கூட்டுச் சேர்ந்து கும்மாளம் அடிக்காது என அமெரிக்கா நிரூபித்துவிட்டது. இப்போது இந்த இடைக்காலத்தில், அமெரிக்காவை விமர்சித்த இலங்கை இனவாத வீரர்களைத் தேடுகின்றோம். அவர்களைக் காணவில்லை” - என்றார்.

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி இரத்தினம்

(கரம்பொன் - பாரிஸ்)



**மலர்வு: 18.05.1936** | **உதிர்வு 20.01.2021**

யாழ். கரம்பொன் கிழக்கு ஊர்காவற்துறையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் பாரிஸ் நகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி இராசரத்தினம் அவர்கள் 20-01-2021 புதன்கிழமை அன்று காலமானார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை- விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லத்துரை- இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், அருணா(கனடா), பிரான்சில் வதியும் ரவீந்திரநாதன்(ரவி), கிருபா, சுகன்னி கிரிகரவேணி(மாதினி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சோதிமதி (இலங்கை), காலஞ்சென்றவர்களான துரைராசசிங்கம், தனபாலசிங்கம் மற்றும் திலகவதி (இலங்கை), காலஞ்சென்ற இரத்தினசிங்கம், குலசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற விஸ்வநாதன் புஸ்பம், மற்றும் லீலாவதி (பிரான்ஸ்), காலஞ்சென்ற உலகேஸ்வரன், தர்மபாலி (இலங்கை), வரதலட்சுமி(கனடா), காலஞ்சென்ற முத்துக்குமார் மற்றும் இலங்கையில் வதியும் தர்மலெட்சுமி, சுந்தரலிங்கம், இராசலெட்சுமிஆகியோரின் அன்பு மைத்துனியும் ஜெகதீசன், சிவரஜனி, வசந்தகுமார்(செல்வம்), ஜெயராசா, குகேந்திரன்(குகன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் வித்தியா, பிரசன்னா, அர்ஜிதா, அஷ்விதா, நித்தியவாணி, அபிராமி, ஐஸ்வர்யா, ஆதித்தன், பிரியங்கன், செந்தூரன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பார்வைக்காக 23.01.2021 சனிக்கிழமை - நேரம் 2.00-3.00 மணி, 24.01.2021 ஞாயிறு - நேரம் 2.00 - 3.00 மணி, 25.01.2021 திங்கள் - நேரம் 3.00 - 4.00 மணி, 26.01.2021 செவ்வாய் - நேரம் 3.00- 4.00 மணி Funérarium 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France எனும் இடத்தில் வைக்கப்பட்டு இறுதிக்கிரிகைகள் 27.01.2021 புதன்கிழமை - நேரம் 12.30 - 2.30 மணிவரை இடம்பெற்று, தனகக்கிரியை 2.45- 3.45 மணிவரை Funérarium 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France இல் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு
அருணா Mobile : +14162660285
ரவிந்திரன் Mobile : +33627083271
கிருபா Mobile : +33651062936
செல்வம் Mobile : +33652913812
சுகன்னி Mobile : +33751533556
வேணி Mobile : +33661440518
குகன் Mobile +33662510439
குலசிங்கம் Mobile : +19055541987

தகவல்:
குடும்பத்தினர்.

ஈழநாடு
Eelanadu

# கொரோனா தடுப்பூசி ஏற்றல்: இன்று 3 இடங்களில் ஒத்திகை

## பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்



**கொழும்பு, ஜன. 23**

**கொவிட் -19 நோய்த் தொற்றுக்கான தடுப்பூசி தருவிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்ட நிலையில், அந்த ஊசியை போடுவது எப்படி என்பது குறித்து இன்று சிறப்பு ஒத்திகையை நடத்த சுகாதார அமைச்சுத் திட்டமிட்டுள்ளது.**

இந்த ஒத்திகை பிலியந்தலை மற்றும் ராகமை வைத்தியசாலை உள்ளிட்ட 3 இடங்களில் நடத்தப்படும் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருத்துவ வல்லுநர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.


"தடுப்பூசி செயல்முறை தொடங்கிய பின்னர் ஏற்படக்கூடிய நடைமுறை சிக்கல்களை அடையாளம் காண்பதில் ஒத்திகை கவனம் செலுத்தும். ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் எத்தனை பேருக்கு தடுப்பூசி போடலாம் என்று ஆராயப்படும்.

தற்போது 26 கொவிட் -19 நோயாளிகள் தீவிர சிகிச்சை பிரிவுகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மற்ற நோயாளிகள் 79 மையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். கடந்த விடுமுறை நாள்களில் பொதுமக்கள் பல்வேறு இடங்களுக்கு பயணிப்பதால் கடந்த சில நாள்களில் கொரோனா நோய்த் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

### இம்முறை சுதந்திர தினத்தில்:

# தேசிய கீதத்தை தமிழில் இசைத்து நல்லிணக்கத்தை வெளிப்படுத்துக

### ஜனாதிபதி, பிரதமருக்கு கடிதம்



கொழும்பு, ஜன. 23

"இம்முறையேனும் தமிழில் தேசிய கீதத்தை இசைத்து இன நல்லிணக்கத்திற்கு நம்பகத் தன்மையை வெளிப் படுத்த வேண்டும்", என புதிய ஜன நாயக முன்னணி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக, ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அந்தக் கட்சி கடிதம் அனுப்பியுள்ளது.

அதில், தொடர்ந்தும் தமிழர்களை அந்நியப்படுத்தாது அவர்களின் உள்ளங்களை வெற்றிக்கொள்ள அரசாங்கம் முயற்சிக்க வேண்டும் என்றும் கோரியுள்ளது.

இந்த விடயம் குறித்து அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளருமான சமன்குமார் கூறுகையில், "இலங்கையின் சுதந்திர தின நிகழ்வுகள் எதிர்வரும் பெப்ரவரி நான்காம் திகதி கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் கோலாகலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ன கடந்த வாரம் ஊடகச் சந்திப்பொன்றை நடத்தி முன்னெடுக்கப்படும் ஏற்பாடுகள் குறித்து விளக்கமளித்தார். எவ்வாறாயினும் அந்த ஏற்பாடுகளும் சுதந்திர தின நிகழ்வுகளும் எந்தவொரு இன மக்களையும் காயப்படுத்தி விடக்கூடாது என்பதில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

எனவே, எதிர்வரும் சுதந்திர தினத்தன்று தமிழிலும் தேசிய கீதத்தைப் பாடி அரசாங்கத்தின் தேசிய இன நல்லிணக்கத்திற்கான சமிஞ்சையை வெளிப்படுத்த வேண்டும். இதனை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள கோரிக்கை கடிதத்தில் வலியுறுத்தியுள்ளோம் - என்றார். (ஐ)

### போதை வர்த்தகர்களுக்கு மரண தண்டனை:

# அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கை ஏற்றது உயர்நீதிமன்றம்

கொழும்பு, ஜன. 23

போதைப் பொருள் வர்த்தகர்களுக்கு மரண தண்டனை விதிப்பது தொடர்பான அடிப்படை மனித உரிமைகள் மீறல் வழக்கை விசாரணைக்கு எடுக்க உயர் நீதிமன்று தீர்மானித்துள்ளது.

போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள், கடத்தல்காரர்களுக்கு எதிராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடும் நடவடிக்கைகளை எடுத்திருந்தார். போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவோருக்கு மரண தண்டனையை நடைமுறைப்படுத்தும் விதமாக தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி சட்டத் திருத்தத்தை மேற்கொண்டிருந்தார்.

அவரின் இந்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அடிப்படை மனித உரிமை மனு உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. இதனை விசாரணைக்கு எடுப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் ஐந்து நீதியரசர்கள் கொண்ட குழு விசாரித்தது.

இதைத் தொடர்ந்து எதிர்வரும் பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானிப்பட்டுள்ளது. (ஐ)

# நாட்டில் தமிழ் சமூகம் வாழும்வரை அரசியல் போராட்டம் தொடரும்!

### பிள்ளையான் சொல்கிறார்

மட்டக்களப்பு, ஜன. 23

"இலங்கையில் தமிழ் சமூகம் வாழும் வரை அரசியல் போராட்டம் தொடரும். அதேநேரம் அபிவிருத்தியையும் சமமாக கொண்டு செல்ல வேண்டும்", என்று பிள்ளையான் என்று அறியப்பட்ட சிவநேசதுரை சந்திரகாந்தன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

அருணாசலம் குமாரதுரையின் இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வில் உரையாற்றும் போத அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், "எதிர்வரும் காலங்களில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கும் தமிழ் மக்களுக்கும் ஒரு மாற்றம் ஏற்படும். நடைபெறவுள்ள கிழக்கு மாகாண சபைத் தேர்தலிலே எமது கட்சியானது ஆளும் தரப்பிலேயே இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக காணப்படுகிறது.

நமது பாரம்பரியத்தை, நமது மூதாதையர்களது எண்ணக்கருவை நிறைவேற்றுவதற்காக நாம் கல்வித்துறையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்துவோம். குறித்த காலப்பகுதி வரும்போது அரசியலும் நிர்வாகமும் மக்களும் ஒன்றித்து பயணிக்க முடியும். இப்போதும் நாங்கள் ஆளும் தரப்பிலேயே இருக்கின்றோம். அந்த அடிப்படையில் கூட இந்த மண்ணுக்கு செய்யக்கூடிய அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளையும் முன்னெடுப்போம்", என்றார். (ஐ)


அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 25.12.2020 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

அமரர் அஞ்ஜலா ஜெயகரன்
( எழுதுவினைஞர் )

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (22.01.2021) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் ( 24.01.2021 ) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய்.

குடும்பத்தினர்
077 741 2348



அருந்ததி
இணைய திருமண சேவை

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| 15601 \| வி \|1987<br>கொக்குவில்\| இந்து \|<br>Goldsmith\| Sri lanka\|<br>அத்தம்(கன்னி) \|165செ.மீ | 15495\| வே \|1995<br>Divorced\| Germany\|<br>இந்து \|நீர்வேலி\|N/A\|செவ் : 02<br>பூராடம் (தனுசு) \|160செ.மீ |
| 15227\|வே\|1987<br>தெல்லிப்பளை \| கிறிஸ்தவம் \|<br>Teacher \|Germany\|<br>172செ.மீ | 15323 \| வே \|1995<br>யாழ்நகரம்\|இந்து \|சூ.செவ்: 04<br>Switzerland\|Tax Officer\|<br>மூலம்(தனுசு)\|170செ.மீ |
| 15197\| வே\|1987<br>சித்தங்கேணி\|இந்து\| செவ் : 08<br>Instructor \|Sri Lanka<br>ரேவதி (மீனம்) \|164செ.மீ | 15023\| வே \|1996<br>மாசேரி\| இந்து \| சூ.செவ்: 02<br>N/A\| Sri lanka \|<br>அத்தம்(கன்னி) \|153செ.மீ |
| 15389\|க \|1988<br>வல்வெட்டித்துறை \| இந்து \|<br>Mariner\|Sri lanka \| லக்.செவ்<br>அவிட்டம் (மகரம்)\|179செ.மீ | 15137\| கு \|1996<br>சண்டிலிப்பாய்\|இந்து \|சூ.செவ்: 12<br>Sri Lanka\|Bank Officer<br>மகம்(சிம்மம்)\| 161செ.மீ |
| 15712\| வே \|1988<br>அத்தியடி\| இந்து \|<br>Accountant\| Australia\|<br>அஸ்வினி (மேடம்) \|169செ.மீ | 15056 \| வே \|1997<br>ஊரெழு \| இந்து \| லக்.செவ்<br>N/A\|Sri lanka \|<br>சுவாதி(துலாம்) \|158செ.மீ |

20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
0777 164 524 www.arunthathee.com

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்




6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் : வழங்குபவர் திருமதி .கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : பீட் பொக்ஸ்



11.00 மணி : மைதானம்-வாராந்த விளையாட்டு நிகழ்வுகளின் தொகுப்பு

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : வீக் என்ட் மூவி-வசூல்ராஜா MBBS
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை

**இரவு**
7.00 மணி : சுப்பர் குறூப்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சொல்லாடுகளம்




10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் சந்தானம் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : டொப் 20
11.00 மணி : ரிவைன்ட் ராகங்கள்

**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே (நேரலை)
3.00 மணி : எங்கேயும் எப்போதும்
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : அண்பிளக் சோ
10.00 மணி : பாடும் நிலா

## கல்வி TV CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - கணிதம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - விஞ்ஞானம்
7.30 மணி : தரம் 09 - தமிழ்
8.15 மணி : தரம் 10 - விஞ்ஞானம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) ஊடகம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப் பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) மறு ஒளிபரப்பு
2.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
3.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
4.00 மணி : தரம் 5 சுற்றாடல்
5.00 மணி : தரம் 5 கணிதம்
6.00 மணி : தரம் 6-9 ஆங்கிலம்
7.00 மணி : பொது சிங்களம்
7.30 மணி : உயர்தரம் கணிதம் விஞ்ஞானப்பிரிவு

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் புங்குடுதீவு நாச்சிமார் கோவில் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்




7.30 மணி : அருளுரை
08.00 மணி : திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் திருவிழா

## CHANNEL HOLY MARY

**காலை**
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : மறை வகுப்பு
4.30 மணி : திருகோணமலை திருப்பலி
5.30 மணி : பாடல்

## Pirai Television

**காலை**
6.00 மணி : தர்ஜீமத்துல் குர்ஆன்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இறை தென்றல்
8.00 மணி : குத்துபா பிரசங்கம்
8.30 மணி : அல் உழ்கிய்யா
9.30 மணி : ஹஜ் ஆவணப்படம்
10.00 மணி : சிறப்பு நேரலை வாழ்த்து நிகழ்ச்சி
12.00 மணி : பிறை பிரசங்கம்

**பகல்**
1.00 மணி : சிறப்பு திரைப்படம்
3.00 மணி : இசை மழை
4..00 மணி : குட்டீஸ் ஈத் கொண்டாட்டம்
5.00 மணி : கவிதாரங்கம்
6.00 மணி : பத்தாம் பிறை கலந்துரையாடல்

**இரவு**
7.00 மணி : யார் இவர்?
10.30 மணி : கலந்துரையாடல்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.01.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.